ஆண்டறிக்கை - 2021

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்
பொல்கொல்ல

உள்ளடக்கம்

	பக்க இலக்கம்
தவிசாளரின் செய்தி	4
பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	5
1. அறிமுகம்	6
1.1. நிறுவனத்தின் பின்னணி	**7**
1.2. நிறுவனத்தின் செயற்பணி	8
1.3 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள்	9
1.3.1 நோக்கு	
1.3.2 செயற்பணி	
1.3.3 குறிக்கோள்கள்	
1.3.4 நோக்கங்கள்	
1.4 நிறுவனத்தின் பிரிவுகள் மற்றும் பிரிவுசார் அடிப்படையிலான செயற்பணி	10
1.4.1 தாபனப் பிரிவு	
1.4.2 கற்கைப் பிரிவு	
1.4.3 கணக்குகள் பிரிவு	
1.4.4 விடுதிப் பிரிவு	
1.4.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	
1.5 பதவியணி மற்றும் நிறுவன ஒழுங்கமைப்பு	11-12
1.5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	
1.5.2 நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு	13
1.5.3 நிறுவனத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்கள்	14
1.6 நிறுவனத்திற்கு உரித்தான வளங்கள்	15
1.6.1 மனித வளம்	
1.6.1.1 கல்விசார் பதவியணி	15-16
1.6.1.2 கல்விசாரா பதவியணி	17-18
1.6.1.3 கனிஷ்ட பதவியணி	18
1.6.2 நிறுவனம்சார் பௌதீக வளங்கள்	
1.6.2.1 மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடம்	18-19
1.6.2.2 பிரதான மண்டபம்	19
1.6.2.3 விரிவுரை மண்டபம்	20-22
1.6.2.4 கணினி ஆய்வுகூடம்	22
1.6.2.5 நூலகம்	22
1.6.2.6 விடுதி	23
1.6.2.7 உணவகம்	23-24
1.6.2.8 சுற்றுலா விடுதி	24
1.6.2.9 அச்சகம் மற்றும் செவிப்புல, கற்புல வசதிகள்	24-25
1.6.2.10 உத்தியோகபூர்வ இல்லங்கள்	25
1.6.2.11 வாகனம் நிறுத்தி வைக்கும் வசதிகள்	25-26
1.7 நிறுவனம்சார் பாடநெறிகள்	26
1.7.1 உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி	
1.7.2 டிப்ளோமா பாடநெறி	26-28
1.7.3 சான்றிதழ் பாடநெறி	28
1.7.4 தொழில்சார் பாடநெறி	29
1.7.5 குறுங்கால பாடநெறி	29-31

1.8 நிறுவனத்தின் எதிர்கால எதிர்பார்ப்புக்களும், சவால்களும்	31
1.8.1 எதிர்கால எதிர்பார்ப்புக்கள்	
1.8.2 நிறுவனம் எதிர்கொள்ளும் சவால்கள்	32-33
2. நிறுவனம்சார் நிருவாகம் மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் முன்னேற்றம்	34
2.1 முகாமைத்துவச் சபை மற்றும் அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம்	35
2.1.1 முகாமைத்துவ சபையின் ஒழுங்கமைப்பு	35
2.1.2 2021 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் பற்றிய விபரம்	36
2.1.3 2021 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்	36
2.2 கற்கைச் சபை மற்றும் அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம்	37
2.2.1 2021 ஆண்டின் கற்கைச் சபையின் ஒருங்கமைப்பு	
2.2.2 2021 ஆம் ஆண்டுக்கான கற்கைச் சபையின் பிரதிநிதித்துவம்	37
2.2.3 2021 ஆம் ஆண்டுக்கான கற்கைச் சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்	38
2.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழு மற்றும் அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம்	38
2.3.1 கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் ஒழுங்கமைப்பு	38
2.3.2 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் பிரதிநிதித்துவம்	39
2.3.3 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்	39
3 2021 ஆம் ஆண்டுக்குரிய நிறுவகத்தின் முன்னேற்றம்	40-41
3.1 தாபன மற்றும் நிருவாகப் பிரிவின் முன்னேற்றம்	42
3.1.1 மனிதவள அபிவிருத்தி	42
3.1.2 பௌதீக வள அபிவிருத்தி	42
3.1.3 பெறுகை நடவடிக்கைகள்	
3.1.4 பரீட்சைகளை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்	43-44
3.2 கற்கைப் பிரிவின் முன்னேற்றம்	45
3.2.1 பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்	45
3.2.1.1 பாடநெறிகளின் முன்னேற்றம் (03 மாதங்களுக்கு மேற்பட்டவை)	45-46
3.2.1.2 குறுங்கால பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதன் முன்னேற்றம்	47
3.2.2 ஆராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றம்	
3.2.3 ஆலோசனை நடவடிக்கைகளின் முன்னேற்றம்	48-49
3.2.4 நூலக வசதிகளின் முன்னேற்றம்	
3.3 விடுதிப் பிரிவின் முன்னேற்றம்	49
3.3.1 2021 ஆம் ஆண்டின் விடுதிப் பிரிவு மற்றும் கேட்போர்கூடத்தை ஒதுக்கும் நடவடிக்கைகளின் முன்னேற்றம்	49
3.3.2 வெளி நிறுவனங்களுக்கு சேவையாற்றுவதன் முன்னேற்றம்	50
3.4 நிதிப் பிரிவின் முன்னேற்றம்	50-51
3.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் முன்னேற்றம்	52
4 2021.12.31 ஆம் திகதிக்கு நிறுவகத்தின் இறுதிக் கணக்குகள்	**53**
5 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	**79-86**

தவிசாளரின் செய்தி



2021 ஆம் ஆண்டுக்காக தயார் செய்யப்பட்டுள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் நிறுவகத்தின் ஆண்டறிக்கைக்கு அதன் தவிசாளர் என்ற வகையில் பெரும் மகிழ்ச்சியுடன் இதனைப் பதிவிடுகின்றேன்.

நிலைபேறான கூட்டுறவு தொழில்முயற்சியை உருவாக்கும் கேந்திர நிலையம் என்ற வகையில் கூட்டுறவு துறைக்கு கூடுதல் கவனம் செலுத்தி கூட்டுறவு அபிவிருத்தி செயற்பணியின் பங்காளியொருவராக தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் சமாந்தரமான நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பாரியதொரு செயற்பணியை ஆற்றிவருகின்றது.

2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்று நோய் பரவிவந்த நிலையில் எதிர்பார்க்கப்பட்டவாறு சேவைகளை ஆற்றுவதில் தடை ஏற்பட்ட போதிலும், இதனை நிறுவகத்தின் நிலைத்திருத்தல் மற்றும் சேவை பெறுவோரின் தேவைகளில் பாரிய தாக்கம் ஏற்படாதவாறு முகாமைத்துவம் செய்து கொள்ள நாம் குழுவொன்றாக நடவடிக்கை மேற்கொண்டோம் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

கூட்டுறவு தொழில்முயற்சியை வலுவூட்டுவதற்குத் தேவையான மனிதவளங்களை நல்லமுறையில் பலப்படுத்தும் செயற்பணிக்கு உச்சளவில் பங்களிப்பை வழங்குதவ்றகு தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் ஆயத்தமாக உள்ளது.

ஜயலத் ரவீ திசாநாயக்க,

தவிசாளர்,

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்,

பொல்கொல்ல.

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



இலங்கையின் கூட்டுறவுத் தொழில்யற்சியானது பல தசாப் காலமாக இலங்கை சமுதாயத்தினருக்கு விசேட சமூக பொருளாதார செயற்பணியை ஆற்றிவருவதுடன், அதன் பங்காளர் என்ற வகையில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் கூட்டுறவுத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கும் பாரிய செயற்பணியை ஆற்றி வருகின்றது. 2021 ஆம் ஆண்டில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலாயினும் தமது சேவைபெறுநர்களுக்கு உச்சளவான விளைதிறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் மேற்கொண்டது.

எவ்வாறாயினும், திட்டமிடப்பட்டவாறு சகல சேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அதற்குச் சமாந்தரமாக முழு நாடும் எதிர்நோக்கிய சவால்களுக்கு மத்தியில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமும் தமது இலக்குக் கல்விசார் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது பல்வேறு தடைகளுக்கு முகம் கொடுத்ததுடன், எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லையாயினும் போதியளவில் நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் போது *இனணயத்தளம்* மூலம் பாடநெறிகளை நடாத்துவதும் **கூட்டுறவுத்துறையினுள்** நிறுவனம் பெற்றுக் கொண்ட வெற்றியாகும்.

மேலும், நிறுவகத்தின் செயற்பணியை நிறைவேற்றும் போது கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலை மிக்க உயர்வாக மதிக்கின்றேன். மேலும் நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றும் போதும், தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைக்கும் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் பங்களிப்பையும் பாராட்டல் வேண்டும். அவ்வாறே, மேற்படி பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மற்றும் இலங்கை தேசிய கூட்டுறவு சபையினால் பாரிய ஒத்துழைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் நிறுவனதின் வளங்களை முகாமைத்துவம் செய்து இலங்கை கூட்டுறவு தொழில்முயற்சியின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்யும் போது தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் வழங்கியுள்ள பெருமைமிகு செயற்பணியையும் இங்கு உயர்வாக மதிக்கின்றேன்.

ஐ.எம்.ஐ. இளங்ககோன்,

பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்,

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்.

1.

அறிமுகம்

1. அறிமுகம்

1.1. நிறுவனத்தின் பின்னணி

இலங்கையின் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பிலான பிரதான செயற்பணியை நிறைவேற்றுகின்ற தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் 1943 முதல் 2001 வரை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இலங்கை கூட்டுறவுக் கல்லூரியாக இயங்கி வந்ததுடன், கூட்டுறவுக் கல்லூரியின் செயற்பணியை மென்மேலும் விஸ்தரிக்கும் நோக்கத்துடன் 2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் மூலம் மென்மேலும் சுயாதீனமான நிறுவனமொன்றாக தாபிப்பதன் கீழ் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமாக மீளத்தாபிக்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தின் பாததும்பர பிரதேச செயலாளர் பிரிவில் கொல்கொல்ல கிராம அலுவலர் பிரிவில் மஹாவலி திருப்பும் அணைக்கட்டுக்கு அருகே சுமார் 20 ஏக்கர் அளவான மனங்கவர் நிலப்பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த நிறுவகத்தின் சுற்றுப்புறச் சூழல் கற்கை நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

கூட்டுறவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மனித வளத்தை அப்பணிகளில் வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் ஈடுபடுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறமைகளைக் கொண்டவர்களாக மாற்றியமைப்பது தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் முக்கிய நோக்கமாகும் என்பதுடன் அதற்கான அறிவை வளர்க்கும் மற்றும் இற்றைப்படுத்தும் பாடநெறிகளை நடாத்தல், செயலமர்வுகளை நடாத்தல், ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், கூட்டுறவுத் தரவு முறைமையை இற்றைப்படுத்திப் பேணிவருதல் மற்றும் தகவல் தொடர்பாடல் வசதிகளைச் செய்துகொடுத்தல், கூட்டுறவு நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்த்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை விளைதிறனுடன் நிறைவேற்றுவதற்குப் போதுமான பௌதீக மற்றும் மனித வளங்கள் நிறுவனத்திடம் காணப்படுவதுடன் நவீன வசதிகளைக் கொண்ட 1120 ஆசனங்கள் உள்ள மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடம், பிரதான மண்டபம் உள்ளிட்ட விரிவுரை மண்டபங்கள், மாணவர் விடுதி மற்றும் விடுதி வசதிகள், உணவு வழங்கும் உணவு உட்கொள்ளும் அறை வசதிகள், கணினி ஆய்வுகூடம், கற்புல, செவிப்புல மற்றும் அச்சிடும் வசதிகள், சகல வசதிகளையும் கொண்ட நூலகம், வாகனத் தரிப்பிட வசதிகள் மற்றும் 71 பேரைக் கொண்ட பதவியணியினரும் இதில் உள்ளடங்குகின்றார்கள்.

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமானது, கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கிவருவதுடன், நிறுவனத்தின் நிருவாகப் பணிகள் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் 08 பேரைக் கொண்ட நிறுவன முகாமைத்துவச் சபையினால் மேற்கொள்ளப்படுவதுடன், கற்கை நடவடிக்கைகள் முகாமைத்துவ சபையினால் நியமனம் செய்யப்படுகின்ற நிறுவகத்தின் கற்கைச் சபையின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. பணிப்பாளர் நாயகம் நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராவார்.

கூட்டுறவுத் தொழிலின் தற்கால சவால்களை வெற்றிகொள்வதற்கு கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயற்பணிக்குப் பலம்சேர்க்கும் வகையில் கூட்டுறவு அபிருத்தித் திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மற்றும் தேசிய கூட்டுறவுச் சபையுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் இரண்டு தசாப்த காலமாக தமது செயற்பணியை நிறைவேற்றி வருகின்றது.

1.2 நிறுவகத்தின் செயற்பணி

2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தை தாபிக்கும் சட்டத்துக்கு அமைய நிறுவனத்தின் செயற்பணி பின்வருமாறாகும்.

i. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதற்கான நிலையமாக செயற்படுதல்.

ii. நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திக் கொண்டு கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய பயிற்சிகளை வழங்குதல்.

iii. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தல்.

iv. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு இடையிலான அன்னியோன்ய செயற்பாடுகள் மற்றும் தகவல் பரிமாற்றத்துக்கான வசதிகளை செய்துகொடுத்தல்.

v. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பிலான தரவுகளை சேகரிப்பதற்கான வள நிலையமொன்றாக செயற்படுதல் மற்றும் சேகரிக்கப்பட்ட குறித்த தரவுகளை பிரகடனம் செய்வதன் மூலம் ஒன்றுதிரட்டல் மற்றும் பரப்புதல்.

vi. கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பிலான விடயங்கள் சம்பந்தமான கலைசார் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்தல் மற்றும் அவ்வாறான பாடநெறிகளை கற்று உரிய பரீட்சைகளில் சித்தியடையும் ஆட்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் வேறு கலைசார் தேர்ச்சிகளை கையளித்தல்.

vii. முகாமைத்துவ திறமைகள் தேவைப்படுகின்ற கூட்டுறவு தொழில்முயற்சிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு முகாமைத்துவம் செய்தல்.

viii. கூட்டுறவு தொழில்முயற்சிகளுக்கு தொழில்சார் ஆலோசனைகளை வழங்குதல்.

ix. மாதிரி கூட்டுறவுக் கிராமங்கள், மாதிரிக் கூட்டுறவு வர்த்தக நிலையங்கள் மற்றும் பிரதேச நிலையங்களை தாபித்தல்; மற்றும்

x. நிறுவகத்தின் பணிகளுக்கு சமமான பணிகளை நிறைவேற்றுகின்ற இலங்கையிலுள்ள அல்லது வெளிநாடுகளில் காணப்படுகின்ற அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

1.3 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள்

1.3.1 நோக்கு

முனைப்புடன் இயங்கும் கூட்டுறவுத் தொழில்முயற்சிக்கு ஆக்கபூர்வமான மற்றும் நவீனமயமான விளைதிறன்மிக்க மனிதவளத்தை உருவாக்கும் கேந்திர நிலையமாதல்.

1.3.2 செயற்பணி

நிலைபேறான கூட்டுறவு தொழில்முயற்சியொன்றை உருவாக்குதவற்கு சனநாயகம், தொழில்முயற்சிசார் பலம் மற்றும் ஆக்கபூர்வமான தன்மையை வளர்ப்பதற்குத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை கட்டியெழுப்புவதன் மூலம் கூட்டுறவு சமுதாயத்தை வலுவூட்டல்.

1.3.3 குறிக்கோள்கள்

1. மென்மேலும் விளைதிறனும், வினைத்திறனும்மிக்க கூட்டுறவுச் சேவையை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்தல்.
2. கூட்டுறவுக் கொள்கைகளை அபிவிருத்தி செய்யும் போது விளைதிறன்மிக்க பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
3. கூட்டுறவு அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுகின்ற முன்னோடி நிறுவனமாக செயற்படுதல்.
4. வெளிப்புற சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு கூட்டுறவு அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல்.

1.3.4 நோக்கங்கள்

1. வெளி நிறுவனங்களுக்கான சேவை அபிவிருத்தி மற்றும் சேவைகளை வழங்குதல்.
2. கூட்டுறவுத்துறை சார்ந்த ஆராய்ச்சிகள், ஆலோசனை மற்றும் தகவல் தொடர்பாடல்.
3. நிறுவனம்சார் திறன் அபிவிருத்தி.

1.4 நிறுவனத்தின் பிரிவுகள் மற்றும் பிரிவுகளின் அடிப்படையிலான செயற்பணி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஐந்து பிரிவுகளின் கீழ் இயங்கிவருகின்றது.

1.4.1. தாபனப் பிரிவு

முகாமைத்துவ சபை நடவடிக்கைகள், தாபன நடவடிக்கைகள், மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள், பரீட்சை நடவடிக்கைகள், பெறுகை நடவடிக்கைகள், மனித மற்றும் பௌதீக வள அபிவிருத்தி நடவடிக்கைகள், பாதுகாப்பு மற்றும் துப்பரவேட்பாடு போன்ற ஒப்பந்தம்சார் சேவை நடவடிக்கைகள், இணையத்தளத்தை பேணிவரும் பணிகள் போன்ற வழமையான நிருவாக நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.4.2. கற்கைப் பிரிவு

கற்கை மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை திட்டமிடுவதும், அபிவிருத்தி செய்வதும், மேற்படி பாடநெறிகளை நடாத்தல், பாடநெறி மதிப்பீட்டு நடவடிக்கைகள், கூட்டுறவு ஆராய்ச்சி நடவடிக்கைகள், கூட்டுறவு தொழில்முயற்சிகளுக்கான ஆலோசனை நடவடிக்கைகள், நூலக சேவைகளை வழங்கும் நடவடிக்கைகள் கூட்டுறவுத் தகவல் முறைமையை பேணிவரும் நடவடிக்கைகள், கற்கைச் சபையின் நடவடிக்கைகள் போன்ற கற்கைசார் நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.4.3. கணக்குகள் பிரிவு

வருடாந்த வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல், மாதாந்த கணக்குக் பொழிப்பைத் தயார் செய்தல், நிலையான சொத்துக்கள், நாளாந்த கணக்கு நடவடிக்கைகள், வருடாந்த இறுதிக் கணக்குகளைத் தயார் செய்தல், கணக்காய்வு வினாக்களுக்கான விடைகளைத் தயார் செய்தல், சகல வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பிலான கணக்கு நடவடிக்கைகள் இப்பிரிவின் செயற்பணியாக உள்ளன.

1.4.4. விடுதிப் பிரிவு

நிறுவகத்திற்கு உரித்தான மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடம், பிரதான மண்டபம் உள்ளிட்ட விரிவுரை மண்டபங்களை ஒதுக்குதல், விடுதி அறைகளை ஒதுக்குதல் தொடர்பிலான நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றுக்கு உணவும், குடிபானமும் உள்ளிட்ட வசதிகளை செய்துகொடுத்தல், இது சம்பந்தமான வருமானங்களை உழைத்தல் தொடர்பிலான நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.4.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தைத் தயார் செய்தல், அமுல்படுத்தல், கணக்காய்வு முகாமைத்துவக் குழு தொடர்பிலான நடவடிக்கைகள் இப்பிரிவின் செயற்பணியாகும்.

1.5. பதவியணி மற்றும் நிறுவன ஒழுங்கமைப்பு

1.5.1. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்கு பின்வருமாறு 71 பேரைக் கொண்ட பதவியணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.


பதவித் தொகுதி	சம்பளக் குறியீடு	பதவிப் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
சிரேஷ்ட முகாமையாளர்	HM 2-1	பணிப்பாளர் நாயகம்	01
சிரேஷ்ட முகாமையாளர்	HM 1-1	பதிவாளர்	01
		பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி)	01
சிரேஷ்ட கற்கை மற்றும் ஆராய்ச்சி	AR – 2	சிரேஷ்ட விரிவுரையாளர்	04
		சிரேஷ்ட நூலகர்	01
		சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்	01
கற்கை மற்றும் ஆராய்ச்சி	AR – 1	விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்	08
		நூலகர்/ உதவி நூலகர்	01
		ஆராய்ச்சியாளர்/ உதவி ஆராய்ச்சியாளர்	01
முகாமைத்துவம்	MM 1-2	உதவிப் பணிப்பாளர் (விடுதி)	01
		உதவிப் பணிப்பாளர் (நிதி)	01
		உதவிப் பதிவாளர்	01
		உள்ளகக் கணக்காய்வாளர்	01
கனிஷ்ட மட்டத்திலான முகாமையாளர்கள்	JM 1-1	கணக்கு அலுவலர்	02
		நிருவாக அலுவலர் (பரீட்சை)	01
		நிருவாக அலுவலர் (நிருவாகம்/ மனிதவளம்)	01
		பெறுகை மற்றும் பராமரிப்பு அலுவலர்	01
		போக்குவரத்து அலுவலர்	01
		நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்)	01
		சந்தைப்படுத்தல் மேம்பாட்டு மற்றும் அச்சு அலுவலர்	01
		கற்புல, செவிப்புல நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	01
		விடுதிப் பொறுப்பு அலுவலர்	01
தத்துவமளிக்கும் / அமுல்படுத்தும் / விஸ்தரித்தல் அலுவலர்கள்	MA 5-3	கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்	01
அமுல்படுத்தும் / விஸ்தரித்தல் அலுவலர்கள்	MA 4	கணினி ஆலோசகர்	03
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)	MA 2-1	கற்புல செவிப்புல தொழில்நுட்ப உதவியாளர்	01
		அச்சு இயந்திர தொழில்நுட்ப உதவியாளர்	01
		முறைமை இயக்குநர்	01

முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா)	MA 1-1	முகாமைத்துவ உதவியாளர்	10
ஆரம்ப வகுதி –தேர்ச்சி	PL – 3	சாரதி	06
ஆரம்ப வகுதி – பகுதியளவிலான தேர்ச்சி	PL – 2	சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்	01
ஆரம்ப வகுதி – தேர்ச்சி அல்லாத	PL – 1	அலுவலக சிற்றூழியர்	14
மொத்தம்			**71**

நிறுவனம்சார் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 71 ஆக உள்ள போதிலும், 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிறுவனத்தில் சேவையாற்றி வருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை 50 ஆகக் காணப்பட்டது. (உதவி விரிவுரையாளர்கள் இருவர் கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியின் கடமைகளை ஆற்றிவருகின்றார்கள்.) அன்றைய திகதிக்கான பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 23 ஆகும்.

நிறுவகத்தின் இப்பதவியணிக்கு மேலதிகமாக நேர்வரிசை அமைச்சுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி அலுவலர்கள் ஏழு பேர் இந்த நிறுவகத்திற்கு 2015 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன், அவர்களும் நிறுவகத்தின் நடவடிக்கைகளுக்கு பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். மேலும், பல்தேவைப் பணி செயலணியின் சேவை உதவியாளர் / சாரதி அலுவலர்கள் 08 பேர் இந்த நிறுவகத்தில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

1.5.2 நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு



1.5.3 நிறுவகத்தில் நிலவும் பதவி வெற்றிடங்கள்

நிறுவகத்திற்கு 71 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் 2021.12.31 ஆம் திகதிக்கு நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 23 ஆகும். இது பின்வருமாறு காணப்பட்டது.

2021.12.31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகள், உண்மையான பதவியணி மற்றும் பதவியணி வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள்.

தொடர் இல.	பதவி	அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள எண்ணிக்கை	வெற்றிடம்
1.	பணிப்பாளர் நாயகம்	01	01	-
2.	பதிவாளர்	01	01	-
3.	பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி)	01	01	-
4.	சிரேஷ்ட விரிவுரையாளர்	04	03*	03
5.	சிரேஷ்ட நூலகர்/ நூலகர்	01	01	-
6.	சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்	01	-	01
7.	விரிவுரையாளர்/ உதவி விரிவுரையாளர்	08	07	01
8.	உதவி நூலகர்	01	01	-
9.	உதவி ஆராய்ச்சியாளர்	01	01	-
10.	உதவிப் பணிப்பாளர் (நிதி)	01	01	-
11.	உதவிப் பணிப்பாளர் (விடுதி)	01	01	-
12.	உதவிப் பதிவாளர்	01	01	-
13.	உள்ளகக் கணக்காய்வாளர்	01	01	-
14.	கணக்கு அலுவலர்	02	02	-
15.	நிருவாக அலுவலர் (பரீட்சை)	01	01	-
16.	நிருவாக அலுவலர் (நிருவாகம்/ மனிதவளம்)	01	01	-
17.	பெறுகை மற்றும் பராமரிப்பு அலுவலர்	01	01	-
18.	போக்குவரத்து அலுவலர்	01	-	01
19.	நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்)	01	01	-
20.	சந்தைப்படுத்தல் மேம்பாட்டு மற்றும் அச்சு அலுவலர்	01	01	-
21.	கற்புல, செவிப்புல நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	01	-	01
22.	விடுதிப் பொறுப்பு அலுவலர்	01	01	-
23.	கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்	01	-	01
24.	கணினி ஆலோசகர்	03	03	-
25.	கற்புல செவிப்புல தொழில்நுட்ப உதவியாளர்	01	01	-
26.	அச்சு இயந்திர தொழில்நுட்ப உதவியாளர்	01	01	-
27.	முறைமை இயக்குநர்	01	-	01
28.	முகாமைத்துவ உதவியாளர்	10	07	03
29.	சாரதி	06	03	03
30.	சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்	01	01	-
31.	அலுவலக சிற்றூழியர்	14	06	08
	மொத்தம்	**71**	**50**	**23**

*உதவி விரிவுரையாளர்கள் இருவர் கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியின் கடமைகளை ஆற்றிவருகின்றார்கள்.

1.6. நிறுவகத்திற்கு உரித்தான வளங்கள்

1.6.1. மனித வளம்

நிறுவகத்தின் பதவியணியானது கல்விசார், கல்விசாரா மற்றும் கனிஷ்ட பதவியணி என்ற வகையில் மூன்று தொகுதிகளுக்கு உரித்தானதாக உள்ளது. அங்கீகரிக்ப்பட்ட பதவியணியில் 23 பேர் கல்விசாரா பதவியணியின் கீழும், 17 பேர் கல்விசார் பதவியணியின் கீழும், 10 பேர் கனிஷ்ட பதவியணியின் கீழும் சேவையாற்றி வருகின்றார்கள்.

1.6.1.1.கல்விசார் பதவியணி

கல்விசார் பதவியணியானது பின்வரும் பதவிகளைக் கொண்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் 05 பதவி வெற்றிடங்கள் இதன் கீழ் காணப்பட்டன.

தொடர் இல.	பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடம்
1.	பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி)	01	01	-
2.	சிரேஷ்ட விரிவுரையாளர்	04	03*	03
3.	சிரேஷ்ட நூலகர்	01	01	-
4.	சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்	01	-	01
5.	விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்	08	07	01
6.	உதவி நூலகர்	01	01	-
7.	உதவி ஆராய்ச்சியாளர்	01	01	-
8.	கணினி ஆலோசகர்	03	03	-
	முழு மொத்தம்	**20**	**17**	**05**

*உதவி விரிவுரையாளர்கள் இருவர் கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியின் கடமைகளை ஆற்றிவருகின்றார்கள்.

வெற்றிடம் காணப்படுதல் மற்றும் தொழில்சார் பாடநெறிகள் உள்ளடங்களாக விசேட பாடங்களுக்கு வெளிவளவாளர்களின் வளப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டில் சேவை பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிவளவாளர்களின் தகவல்கள் பின்வருமாறாகும்.

தொடர் இல.	பெயர் / பதவி	விடயப்பரப்பு
01.	திருமதி பீ.எஸ். விஜேரத்ன	வியாபார ஆங்கிலம்
02.	திரு டி.எம்.ரீ. திசாநாயக்க ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்	மனித வள முகாமைத்துவம் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரச் சூழல், முகாமைத்துவ கோட்பாடு மற்றும் நடைமுறைப்படுத்தல், கூட்டுறவு அபிவிருத்தி தொழில் முகாமைத்துவத் திறன்கள் அபிவிருத்தி
03.	திரு ஈ.எம்.எம். ஏக்கநாயக்க கணக்காய்வு பரிசோதகர்	முகாமைத்துவக் கோட்பாடு, பொருளியல் கோட்பாடு
04.	திரு கே.டி.ஜே.பீ. குமார	வியாபார கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல்
05.	திருமதி ஏ.ஐ. விதானகே சிரேஷ்ட ஆசிரியர் (கொழும்பு சர்வதேச பாடசாலை)	சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
06.	திரு ஹஸ்திக்க நெரஞ்ஜன் முகாமையாளர் (சொலமன் டி சில்வா மற்றும் தொழில்முயற்சி)	முகாமைத்துவ கணக்கீடு, கணக்காய்வுக் கோட்பாடு, கணக்கீட்டு நியமங்களும், அமுல்படுத்துவதும், உயர் நிதிக் கணக்கீடு, செலவினம் மற்றும் வரியியல்
07.	திரு ஈ.எம்.எஸ்.ஈ.பி. ஏக்கநாயக்க சட்டத்தரணி	வியாபார சட்டம்
08.	திரு எஸ்.டி.எம். ஜயதுங்க தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் (Info-Mesh computer system,Kurunegala)	கணினி முறைமை
09.	திருமதி எஸ். கொடிதுவக்கு சிரேஷ்ட விரிவுரையாளர் (பேராதனை பல்கலைக் கழகம்)	நிறுவன நிதி
10.	திரு டி.ஜி.சி. குமாரசிங்க ஐக்கிய நாடுகளின் கருத்திட்டச் சேவைகள் அலுவலர் (UNOPS)	Graphic Design
11.	திரு ஆர்.எம்.எஸ்.கே. ரத்நாயக்க	இணையத்தள அபிவிருத்தி (PHP/HTML/CSS)
12.	திருமதி ஏ.யு. சேனாநாயக்க – விரிவுரையாளர் (SIBA பல்கலைக் கழகம்)	Java
13.	திரு டி.கே. அலுத்கெதர	நிகழ்ச்சித்திட்டமிடல் (c#net)
14.	திரு சேனக ரத்நாயக்க இணையத்தள அபிவிருத்தி (ஆஜளு பிரிவு, பேராதனை பல்கலைக் கழகம்	இணையத்தள அபிவிருத்தி
15.	திரு என்.என். சுவந்தரத்ன	நிதியீட்டல் கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல், கணக்கீட்டு நியமங்களும் அமுல்படுத்தலும், கருத்திட்ட முகாமைத்துவம்
16.	திருமதி டி.டி. காந்தி ஜராங்கனீ	உயர் நிதிக் கணக்கீடு, செயன்முறைக் கணக்கீடு, செயன்முறை கூட்டுறவுக் கணக்கீடு

17.	திரு அபய பி. புளத்கமுவ ஓய்வுபெற்ற பணிப்பாளர் ஊஊ	கூட்டுறவு சட்டமும், பொதுச் சட்டமும், கணக்காய்வுக்கான சட்டம், வங்கியியல் மற்றும் சட்டம்
18.	திருமதி நிலுகா கத்ரிஆரச்சி	சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தின் அடிப்படை அம்சங்களும், பயன்பாடும்
19.	திரு வஜிர சமரகோன் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்	கணக்காய்வுக் கோட்பாடு, கணக்காய்வு நடைமுறை, கணக்காய்வு நியமங்களும், பயன்படுத்துவதும்
20.	திருமதி ரஞ்ஜனீ பெரேரா காணி மீட்பு ஆணையாளர்	அலுவலக முகாமைத்துவத்தின் அடிப்படைய அம்சங்கள்
21.	திரு எச்.என். சமரதுங்கஆரச்சி	நிதிக் கணக்கீடும், பகுப்பாய்வும், கணக்காய்வு நடைமுறை
22.	திரு எரந்த ஏக்கநாயக்க சட்டத்தரணி	கணக்காய்வுக் கோட்பாடு, கணக்காய்வு நியமங்களும், பயன்படுத்துவதும், கணக்காய்வு அறிக்கையிடல்
23.	திரு சுகத் ஹெட்டிஆரச்சி கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்	கணினிக் கணக்கீட்டு முறைமை கணக்காய்வு
24.	திரு மொஹான் டி சில்வா	உபாயமுறையிலான முகாமைத்துவம்
25.	திரு பாலித திலகசிறி	கணக்காய்வுக் கோட்பாடு
26.	திரு ரீ. ரணதுங்க ஓய்வுபெற்ற ளுடுயுளு அலுவலர்	தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங்கள்
27.	திரு ரீ.எவ். ரசீத் சிரேஷ்ட விரிவுரையாளர்	தமிழ்
28.	திரு ரொஹான் வலிகும்புற	ஆங்கிலம்
29.	திருமதி எல்.ஐ. பிரியதர்ஷனீ	கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில் சூழல்
30.	திரு பி.வீ. பத்திரண ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர், மக்கள் வங்கி	தொழில்சார் முகாமைத்துவ திறன் விருத்தி
31.	திரு யூ.ஜி.சி. அனுருத்த கமகே	வங்கி நடவடிக்கை முகாமைத்துவம்

1.6.1.2. கல்விசாரா பதவியணி

கல்விசாரா பதவியணியின் எண்ணிக்கை 30 ஆகும் என்பதுடன், பின்வரும் பதவிகளைக் கொண்டதாக இது காணப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் கல்விசாரா பதவியணியில் 07 வெற்றிடங்கள் காணப்பட்டன.

தொடர் இல.	பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடம்
1.	பணிப்பாளர் நாயகம்	01	01	-
2.	பதிவாளர்	01	01	-
3.	உதவிப் பணிப்பாளர் (நிதி)	01	01	-
4.	உதவிப் பணிப்பாளர் (விடுதி)	01	01	-
5.	உதவிப் பதிவாளர்	01	01	-
6.	உள்ளகக் கணக்காய்வாளர்	01	01	-
7.	கணக்கு அலுவலர்	02	02	-

8.	நிருவாக அலுவலர் (பரீட்சை)	01	01	-
9.	நிருவாக அலுவலர் (நிருவாகம்/ மனிதவளம்)	01	01	-
10.	பெறுகை மற்றும் பராமரிப்பு அலுவலர்	01	01	-
11.	போக்குவரத்து அலுவலர்	01	-	01
12.	சந்தைப்படுத்தல் மேம்பாட்டு மற்றும் அச்சு அலுவலர்	01	01	-
13.	கற்புல, செவிப்புல நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	01	-	01
14.	விடுதிப் பொறுப்பு அலுவலர்	01	01	-
15.	கணினி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்	01	-	01
16.	கற்புல செவிப்புல தொழில்நுட்ப உதவியாளர்	01	01	-
17.	அச்சு இயந்திர தொழில்நுட்ப உதவியாளர்	01	01	-
18.	முறைமை இயக்குநர்	01	-	01
19.	முகாமைத்துவ உதவியாளர்	10	07	03
	மொத்தம்	**30**	**23**	**07**

1.6.1.3. கனிஷ்ட பதவியணி

கனிஷ்ட பதவியணிக்கு 21 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 2021.12.31 ஆம் திகதிக்குக் காணப்பட்ட பதவிகள் மற்றும் வெற்றிடங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இல.	பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடங்களின் எண்ணிக்கை
01.	சாரதி	06	03	03
02.	சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்	01	01	-
03.	அலுவலக சிற்றூழியர்	14	06	08
	மொத்தம்	**21**	**10**	**11**

1.6.2. நிறுவகத்தின் பௌதீக வளங்கள்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமானது சுமார் 21 ஏக்கர் காணிப்பகுதியில் போதியளவு வசதிகளைக் கொண்டதாக தாபிக்கப்பட்டுள்ளது. அலுவலக வளவு, கேட்போர்கூடம், விரிவுரை மண்டபம், கணினி ஆய்வுகூடம், விடுதி, உணவுச்சாலை, நூலகம், உத்தியோகபூர்வ இல்லங்கள், சுற்றுலா விடுதி, அச்சகம், கற்புல, செவிப்புல வசதிகள், வாகனத் தரிப்பிட வசதிகளைக் கொண்டதாக கற்கை நிறுவகத்திற்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்டுள்ளது. விரிவான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1.6.2.1 மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடம்

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான செயலமர்வுகள், கருத்தரங்குகள், வைபவங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குப் போதியளவு

வசிதகளைக் கொண்டதாக கணினிமயப்படுத்தப்பட்ட அதிநவீன ஒலி உபகரணங்களைக் கொண்ட கட்டமைப்பு, ஒளியூட்டும் கட்டமைப்பு, முழுமையாக வளிச்சீராக்கல் செய்யப்பட்டுள்ளதும், 1118 சொகுசு ஆசனங்களை கொண்டதுமாக இது காணப்படுவதுடன், இந்தக் கேட்போர் கூடத்தில் தனியான 80 ஆசனங்களைக கொண்ட இரண்டு கருத்தரங்கு மண்டபங்களும் காணப்படுகின்றன.





நவீன தளபாடங்களைக் கொண்ட உணவகம வசதியும் இதில் உள்ளடங்குவதுடன், ஒரே தடவையில் 250 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வாகனத் தரிப்பிட வசதியும் இதில் உள்ளடங்குவதுடன், 2021 ஆம் ஆண்டில் ரூபா 480,000.00 ஆன தொகை இதன் மூலம் உழைக்கப்பட்டது.

விபரம்	இடவசதி
முழுக் கட்டிடத்தின் சதுர அளவு	3723.63 சதுர மீற்றர்
பிரதான கேட்போர்கூடம் (பெல்கனி மற்றும் கீழ் மாடி)	1505.5 சதுர மீற்றர்
பிரதான மேடை	259 சதுர மீற்றர்
கேட்போர்கூட ஆசனங்களின் எண்ணிக்கை	1118 (711+407)
விருந்தினர்களுக்கான ஓய்வறை	1000 சதுர மீற்றர்
அலுவலக இடவசதிகள்	240 சதுர மீற்றர்
விரிவுரை மண்டபம் மற்றும் ஏனைய கலைஞர்களுக்கான இடவசதிகள்	719.13சதுர மீற்றர்

1.6.2.2 பிரதான மண்டபம் (வின்சன்ட் சுபசிங்க மண்டபம்)

பிரதான மேடையைக் கொண்ட 450 ஆசனங்களுடனான இந்த மண்டபம் கற்புல செவிப்புல உபகரண வசதிகளுடன் கருத்தரங்குகள், மேடை நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், பரிசளிப்பு வைபவங்கள் மற்றும் செயன்முறை நடவடிக்கைகளைக் கொண்ட செயலமர்வுகளுக்கு சேவை வசதிகளை வழங்குவதற்கு உகந்த மண்டபமாகும்.

1.6.2.3 விரிவுரை மண்டபங்கள்

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட விரிவுரை மண்டபங்கள்

- **ரத்நாயக்க மண்டபம்**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட கருத்தரங்குகளுக்கு "யூ" வடிவிலான மேசைகளைக் கொண்ட வசதியான 55 ஆசனங்களைக் கொண்ட இந்த மண்டபம் கற்புல, செவிப்புல வசதிகள், OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சிச் செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான வசதிகள் கொண்டுள்ளது.



- **ரொச்சிடேல் மண்டபம்**



மேடையைக் கொண்ட வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபம் மேசைகள் மற்றும் வசதியான 60 ஆசனங்களைக் கொண்டதும், மேசை இல்லாத 100 ஆசனங்களைக் கொண்டதுமாக சேவை வசதிகளை வழங்கக்கூடியதாக உள்ளதுடன், இந்த மண்டபம் கற்புல, செவிப்புல வசிதகள், OHP, White Board, Clip Board, Chart Board, உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், குழுச் செயற்பாடுகள், விரிவுரை போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்டதாக பூரணமான மண்டபமாக உள்ளது.

- **C-1 மண்டபம்**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபமானது வசதியான 40 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board, உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **C-2 மண்டபம்**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபமானது வசதியான 40 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board, உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **C-3 மண்டபம்**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபமானது வசதியான 20 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board, உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்த வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 04**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபமானது வசதியான 65 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், கற்புல, செவிப்புல வசதிகள், OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 05**

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இந்த மண்டபமானது வசதியான 30 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், கற்புல, செவிப்புல வசதிகள், OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

<u>வளிச்சீராக்கல் செய்யப்படாத விரிவுரை மண்டபங்கள்</u>

- **புதிய ரொச்சடேல் மண்டபம்**

இந்த மண்டபமானது மாணவர் மேசை மற்றும் ஆசனங்கள் 60 ஐக் கொண்டுள்ளதுடன், ஆரடவஅநனயை ளுஉசநநஇ ழுரீஇ றூவைந டீழுயசனஇ ஊடனி டீழுயசனஇ ஊயாயசவ டீழுயசன உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **B மண்டபம்**

இந்த மண்டபமானது மாணவர் மேசை மற்றும் 80 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், Multimedia Screen, OHP, White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 01**

இந்த மண்டபமானது வசதியான 35 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், White Board, Clip Board, Chart Board உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 02**

இந்த மண்டபமானது வசதியான 30 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், றூவைந டீழுயசனஇ ஊடனி டீழுயசனஇ ஊயாயசவ டீழுயசன உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.

- **பல்தேவைக் கட்டிடம் - விரிவுரை மண்டப இலக்கம் 03**

இந்த மண்டபமானது வசதியான 40 ஆசனங்களைக் கொண்டுள்ளதுடன், றூவைந டீழுயசனஇ ஊடனி டீழுயசனஇ ஊாயசவ டீழுயசன உள்ளிட்ட பயிற்சி செயலமர்வுகள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு உகந்தவாறான வசதிகளைக் கொண்டுள்ளது.


1.6.2.4 கணினி ஆய்வுகூடம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவானது, மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள அரச மற்றும் தனியார் துறையின் சிறந்த கணினி நிலையமொன்றாக உள்ளது.

இரண்டு பிரிவுகளின் கீழ் இயங்கிவருகின்ற கணினிப் பிரிவு கூட்டுறவுத் துறையின் கல்விமான்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பிரதான வளவிலுள்ள கணினி நிலையத்தில் 24 கணினிகள் ஒதுக்கப்பட்டு கற்கை வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலைக் கல்வியைப் பயிலும் மற்றும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து தகவல் தொழில்நுட்பத் துறையில் பிரவேசிக்கும் எதிர்பார்ப்புடன் உயர் பாடநெறிகளை தேடுகின்ற பிள்ளைகளுக்கான பாடநெறிகளை வழிப்படுத்தும் மற்றும் தொழில்சார் பாடநெறிகளின் தகவல் தொழில்நுட்ப பாடத்தை உள்ளடக்கியதாக பல்தேவைக் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப நிலையத்தில் 55 கணினிகள் மாணவர்களின் உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்டு பேணிவரப்படுகின்றன.





1.6.2.5 நூலகம்

நிறுவகத்தின் நூலகம் இந்நாட்டின் கூட்டுறவுத் துறைக்கு உரித்தான வளர்ச்சியடைந்த நூலகமாகக் கருதப்படுகின்றது. பல்வேறு துறைகளிலும் எழுதப்பட்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம்மிக்க நூல்கள், பருவகால சஞ்சிகைகள் என்பன சுமார் இருபத்தோராயிரம் இங்கு காணப்படுகின்றன. மேலும் இங்கு கூட்டுறவுத் துறை சம்பந்தமான நூல்களின் தொகுதியொன்று தனியாக பேணிவரப்படுவதுடன், பத்திரிகை ஆக்கங்கள், சஞ்சிகைகளின் தொகுப்பொன்றும் பேணிவரப்படுகின்றது. நூலக சூசிகை கணினிமயப்படுத்தப்பட்டு வருகின்றது.



நூலக சேவைக்கு உரித்தான இணையத்தள வசதிகளையும் வாசகர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

1.6.2.6. விடுதிகள்

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட மற்றும் செய்யப்படாத அறைகளை கொண்டதாக தனியான மற்றும் இருவருக்கான அறை வசதிகளுடன் ஒரே தடவையில் 222 பேருக்கு விடுதி வசதிகளை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக 7 விடுதிகள் இங்கு காணப்படுகின்றன. விடுதி வசதிகளுக்கு மேலதிகமாக கூட்டுறவுத்துறை, அரச துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த ஆட்களுக்கு தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக சகல வசதிகளையும் கொண்ட சுற்றுலா விடுதியும் விடுதிப் பிரிவுக்கு உரித்தானதாகக் காணப்படுகின்றது.

- **ரத்நாயக்க விடுதி**

இந்த விடுதி முழுமையாக வளிச்சீராக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இருவருக்கான 12 அறைகளைக் கொண்டுள்ளது. இதில் குளியல் அறை வசதிகளைக் கொண்டதாக 08 அறைகளும், பொதுக் குளியல் அறை வசதிகளைக் கொண்டதாக 4 அறைகளும் காணப்படுகின்றன. இந்த ஒட்டுமொத்த விடுதியில் ஒரே தடவையில் 22 பேருக்கான தங்குமிட வசதிகள் காணப்படுகின்றன.

- **புதிய ரத்நாயக்க விடுதி**

முழுமையாக வளிச்சீராக்கல் செய்யப்பட்டுள்ள இந்த விடுதியில், இருவருக்கான 04 அறைகள் மற்றும் 16 தனி நபர் அறைகளைக் கொண்டுள்ளதுடன் இதன் சகல அறைகளும் குளியல் அறை வசதிகளைக் கொண்டதாக காணப்படுகின்றன. இந்த விடுதியில் ஒரே தடவையில் 24 பேருக்கான தங்குமிட வசதிகள் காணப்படுகின்றன.

- **ரத்நாயக்க இல்லம்**

இங்கு இரண்டு வீடுகள் காணப்படுவதுடன் ஒரு வீட்டில் 03 அறைகள் வீதம் குளியல் அறை வசதிகள் சகிதம் இரண்டு வீடுகளிலும் 14 பேருக்கான தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- **D/E/F/G விடுதி**

04 விடுதிக் கட்டிடங்களில் இருவருக்கான 72 அறைகள் காணப்படுவதுடன், இந்த விடுதியில் ஒரே தடவையில் 144 பேருக்கான தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும். ஒவ்வொரு விடுதிக்கும் தனியான பொதுக் குளியல் அறைகள் காணப்படுகின்றன.

- **H விடுதி**

இந்த விடுதி மூன்று பேர் இருக்கக்கூடிய 06 அறைகளைக் கொண்டுள்ளதுடன், பொதுக் குளியல் அறையும் உள்ளதுடன், 18 பேருக்கு ஒரே தடவையில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1.6.2.7. உணவுச்சாலை

பயிற்சிச் செயலமர்வுகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வைபவங்களில் பங்கேட்கும் விருந்தினர்களுக்கும், நிறுவகத்தின் ஏனைய உள்ளக பயிலுனர்கள் மற்றும் பதவியணியினருக்கும் சுகாதார ரீதியாக உணவும், குடிபானமும் தயார் செய்து வழங்குவதற்கான உணவுச்சாலை சேவை பேணிவரப்படுகின்றது. மதிய மற்றும் இரவு நேரங்கள் இரண்டிலும் உள்நாட்டு, வெளிநாட்டு உணவு

வகைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அனுபவம்வாய்ந்த பதவியணியினர் நடவடிக்கை மேற்கொள்கின்றார்கள். முழுமையாக ரயில் பதிக்கப்பட்டு நவீன தளபாடங்களைக் கொண்டதாக பூபே முறையில் உணவு பரிமாறும் உணவுச்சாலையில் எப்பொழுதும் உயர் மட்ட சுகாதார நடைமுறைகள் பேணிவரப்படுகின்றன. ஒரே தடவையில் சுமார் 200 பேருக்கு அமர்ந்து உணவு பரிமாறும் வசதிகள் காணப்படுகின்றன.





1.6.2.8.சுற்றுலா விடுதி

வரலாற்று முக்கியத்துவமிக்க தளதா மாளிகைக்கு சுமார் 08 கிலே மீற்றர் தூரத்திலிருந்து இலகுவாக சென்றடையக்கூடிய கண்டி – மடவளை ஊடாக வத்தேகம வீதியில் மகாவளி அணைக்கட்டுக்கு அருகாமையில் மற்றும் மகிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடத்திற்கு அருகாமையில் இந்த சுற்றுலா விடுதி அமைந்துள்ளது.

வளிச்சீராக்கல் செய்யப்பட்ட பிரதான அறைகள் இரண்டும் (ஆயளவநச டீநன சுழழஅ) இருவருக்கான இரண்டு அறைகளும் (Double Room – with Single Bed) சொகுசு சோபா மற்றும் உணவு மேசையைக் கொண்டதும் வளிச்சீராக்கல் செய்யப்பட்ட இருக்கை அறையைக் கொண்டதுமாக இது காணப்படுகின்றது.

தும்பர பள்ளத்தாக்கில் எப்பொழுதும் நிலவும் இதமான காலநிலை மற்றும் சுற்றுலா விடுதியைச் சூழ்ந்ததாகக் காணப்படுகின்ற முற்று முழுவதும் திறந்த வெளியைக் கொண்ட சுதந்திரமான, பசுமையான அமைதிச் சூழல் குடும்பத்தவர்கள் மற்றும் நெருக்கமானவர்களுடன் மனக்கவளைகளை மறந்து இருப்பதற்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.





1.6.2.9. அச்சகம் மற்றும் கற்புல செவிப்புல வசதிகள்

ஒவ்செட் அச்சு மற்றும் டுப்ளோ அச்சு ஆற்றலைக் கொண்டதாக உள்ள நிறுவனத்தின் அச்சகமானது அதற்குத் தேவையான ஏனைய இயந்திரங்கள் மற்றும் வசதிகளைக் கொண்டுள்ளதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் நிறுவகத்தின் மற்றும் கல்வி பயில்வோரின் அச்சுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

மேலும், எதிர்காலத்தில் அரச, கூட்டுறவுத்துறை மற்றும் தனியார் துறையினருக்கும் அச்சுசார்ந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் பிரிவாக இதனை விஸ்தரிக்க வேண்டிய தேவையும் இனங்காணப்பட்டுள்ளது.

கூட்டுறவு விடயம் தொடர்பில் நடாத்தப்படுகின்ற பல்வேறு பாடநெறிகள் மற்றும் வெளி நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான கற்புல, செவிப்புல வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. விரிவுரை மண்டபங்களுக்கான ஹெட் புரொஜெக்டர்ஸ், மல்ரிமீடியா இயந்திரங்கள், கற்புல, செவிப்பு உபகணரங்கள் போன்ற தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் ‘‘வீடியோ’’ செய்வதைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் ‘‘மைக்ரோ ரீசின்’’ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் வசதியையும் இப்பிரிவிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், வீடியோ திரைப்படங்களை காட்சிப்படுத்தும் வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். கூட்டுறவுத் துறை தொடர்பில் நடாத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்களின் விசேட நிகழ்வுகளை உள்ளடக்கியதாக புகைப்படத் தொகுப்பொன்றைப் பேணிவருவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மற்றொரு சேவையாகும்.



1.6.2.10. உத்தியோகபூர்வ இல்லங்கள்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பணியை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நிறுவகத்திற்கு உரித்தானதாகக் காணப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை 19 ஆகும். மேற்படி உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை மற்றும் தன்மைக்கு அமைய அவை வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மூலதனச் செலவனங்களை செலவிட்டு புதுப்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 04 ஆகும்.

1.6.2.11. வாகனத் தரிப்பிட வசதிகள்

மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூட வளவில் ஒரே தடவையில் சுமார் 250 வாகனங்களை இலகுவாக நிறுத்திவைப்பதற்கான வசதிகள் காணப்படுவதுடன், பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டுள்ள 03 நுழைவாயில்கள்

காணப்படுகின்றன. தலைமை அலுவலக வளவில் நிறுவனம் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்காக வருகைதருகின்ற வெளியாரின் சுமார் 100 வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான வசதிகள் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக கொடுப்பனவு நடவடிக்கைகளை மென்மேலும் இலகுபடுத்துவதற்காக மக்கள் வங்கியின் கிளையொன்றும், ஏரீஎம் (ATM) இயந்திரமொன்றும் நிறுவன வளவில் தாபிக்கப்பட்டுள்ளன.

1.7. நிறுவகத்தின் பாடநெறிகள்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தினால் பின்வருமாறு 20 பாடநெறிகள் வருடாந்தம் நடாத்தப்பட்டுள்ளன.

டிப்ளோமா பாடநெறிகள்	08
சான்றிதழ் பாடநெறிகள்	03
குறுங்கால பாடநெறிகள்	09
மொத்தம்	**20**

ஒவ்வொரு பாடநெறி தொடர்பிலுமான சுருக்க விபரம் பின்வருமாறாகும்.

1.7.1.உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி

இந்த நிறுவகமானது, முகாமைத்துவ மற்றும் கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியையும், தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியையும் நடாத்த திட்டமிட்டிருந்த போதும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக 2021 ஆம் ஆண்டு மேற்படி பாடநெறிகை நடாத்த முடியுவில்லை.

1.7.2. டிப்ளோமா பாடநெறிகள்

மேல் /சபறகமுவா /ஊவா /மத்திய /வடமத்திய /தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கான கூட்டுறவு அபிவிருத்தி டிப்ளோமா படநெறி மற்றும் கூட்டுறவு சங்க அலுவலர்களுக்கான 07 டிப்ளோமா பாடநெறிகள் 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

1. வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி
2. கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி
3. முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி
4. வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி
5. நுன் நிதி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி
6. தொழில் முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி (சிலாபம் / புத்தளம் மாவட்ட கூட்டுறவு சபை)
7. வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி குளியாப்பிட்டி

1.7.2.1. வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி

இலங்கையின் கூட்டுறவுத் தொழில்முயற்சிகளின் பிரதம நிறைவேற்றுநர், நடுத்தர நிறைவேற்றுநர் மற்றும் நிறைவேற்றுநர் மட்டத்தில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு தமது கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அமைப்புக்களை முகாமைத்துவம் செய்யும் போதும், அது தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்ளும் பணியின் போதும் தீவிர கவனத்துடன் உரிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு தமது அமைப்புக்களை வழிப்படுத்துவது தொடர்பிலான அறிவு,

திறமை மற்றும் மனப்பாங்கு, நடைமுறைகளை அபிவிருத்தி செய்துகொடுக்கும் நோக்கத்துடன் இந்தப் பாடநெறி தயார் செய்யப்பட்டுள்ளது.

1.7.2.2. கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி

இலங்கை கூட்டுறவுத்துறையில் தாபிக்கப்பட்டுள்ள நல்லாட்சிப் பணியொன்றாக மதிப்பீடு செய்யப்படுகின்ற முக்கியமானதொரு அளவுகோளாக கணக்காய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை குறிப்பிட முடியும். அதற்கமைய கணக்காய்வு கடமைகளில் ஈடுபடுகின்ற வெளியார் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு தமது கடமை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான அறிவு, திறமை, மனப்பாங்கு மற்றும் நடைமுறைகளை அபிவிருத்தி செய்துகொள்ளும் நோக்கத்துடன் இந்த டிப்ளோமா பாடநெறி திட்டமிடப்பட்டுள்ளது.

1.7.2.3. கூட்டுறவு அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களங்களில் சேவையாற்றி வருகின்ற கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறியில் சித்தியடைந்துள்ள சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்காக கூட்டுறவு அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி நடாத்தப்படுகின்றது. ஆறு மாத கால கற்கைக் காலத்துடன், 03 மாத கால வெளிக்களப் பயிற்சி வழங்கப்படுவதுடன், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்குத் தேவையான செயன்முறைசார் மற்றும் கோட்பாடுசார் அறிவு இந்தப் பாடநெறி மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

1.7.2.3 முகாமைத்துவம் மற்றும் கணக்கீடு பற்றிய டிப்ளோமா பாடநெறி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் தொழில்சார் கற்கைப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த டிப்ளோமா பாடநெறியானது ஒரு வருடத்தினுள் இரண்டு தவணைகளின் கீழ் நடாத்தப்படுகின்றது. இதற்கு கூட்டுறவுத்துறையில், அரச துறையில் மற்றும் தனியார் துறையில் சேவையாற்றும் அலுவலர்கள் மற்றும் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர்கள் பங்கேற்பதுடன், இப்பாடநெறியானது முகாமைத்துவம் மற்றும் கணக்கீடு பற்றிய பட்டப் படிப்பின் முதலாம் ஆண்டாக காணப்படுகின்றது.

1.7.2.4 வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் பிரதான வகிபாகமொன்றான கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறைவேற்று மற்றும் நடுத்தர முகாமைத்துவ மட்டத்திலான அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், இந்தப் பாடநெறி திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, கூட்டுறவு கிராமிய வங்கிகள், சனச வங்கிகள் மற்றும் வேறு கூட்டுறவு வங்கிச் சங்கங்களில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு மற்றும் நிதி நிறுவனங்களின் அலுவலர்களுக்கு தமது தொழில்சார் திறமைகளை வளர்த்துக் கொள்ளத் தேவையான அடிப்படையை பெற்றுக் கொடுப்பது இந்த பாடநெறிகளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

1.7.2.5 நுண்நிதியீட்டல் பற்றிய டிப்ளோமா பாடநெறி

கிராமிய கடன் தேவைகளை இன்று வினைத்திறன்மிக்கவாறு கிராமிய மக்களுக்கு நிறைவேற்றிக் கொடுப்பதற்காக கிராமிய நிதி நிறுவனங்களில் சேவையாற்றும் மனிதவத்தை அறிவு, திறமை, மனப்பாங்குசார் அடிப்படையில் வலுட்டுவது தற்காலத்தில் பிரதான பணியொன்றாக மாறியுள்ளது. இதன் மூலம்

எதிர்பார்க்கப்படுவது கிராமிய கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் அவர்களை சுயதொழில்வாய்ப்பைக் கொண்டுள்ளவர்களாக மாற்றியமைக்கும் முறையியலை உருவாக்குவதாகும். மேலும் முறைசாரா கடன் பெறும் வழிகளில் ஈடுபட்டுள்ள கிராமிய மக்களை அதிலிருந்து விடுவித்து முறைசார் கடன் கலாசாரத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் இந்தப் பாடநெறியை ஒழுங்கு செய்வதன் முக்கிய நோக்கமொன்றாக உள்ளது.

1.7.2.6 வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி – குளியாப்பிட்டி

இலங்கையின் கூட்டுறவுத் தொழில்முயற்சிகளின் பிரதம நிறைவேற்றுநர், நடுத்தர நிறைவேற்றுநர் மற்றும் நிறைவேற்றுநர் மட்டத்தில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு தமது கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அமைப்புக்களை முகாமைத்துவம் செய்யும் போதும், அது தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்ளும் பணியின் போதும் தீவிர கவனத்துடன் உரிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு தமது அமைப்புக்களை வழிப்படுத்துவது தொடர்பிலான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு, நடைமுறைகளை அபிவிருத்தி செய்துகொடுக்கும் நோக்கத்துடன் இந்தப் பாடநெறி தயார் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக வரை. குளியாப்பிட்டி மாவட்ட சனச சங்கத்தின் கோரிக்கையின் பேரில் விசேடமாக வடமேல் மாகாண சனச சங்கங்கள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சேவையாற்றுகின்ற முகாமையாளர்களின் தொழில்சார் மட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் தொலை வாரஇறுதி பாடநெறியாக இந்த டிப்ளோமா பாடநெறியை நடாத்தத் தேவையான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பாட மொடியுல்கள் 12 ஐக் கொண்ட இந்த டிப்ளோமா பாடநெறி வரை. குளியாப்பிட்டி மாவட்ட சனச சங்கத்தின் கேட்போர் கூடத்தில் வார இறுதி நாட்களில் நடைபெறுகின்றது.

1.7.3 <u>சான்றிதழ் பாடநெறிகள்</u>

வடமத்திய /மேல் /தென் /ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கான கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் படநெறி மற்றும் வடமேல் / மத்திய கூட்டுறவு சங்க அலுவலர்களுக்கான கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறி நடாத்தப்பட்டது.

1.7.3.1 கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய சான்றிதழ் பாடநெறி

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் புதிய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கு கூட்டுறவு அபிவிருத்திச் சான்றிதழ் பாடநெறி நடாத்தப்படுகின்றது. 4½ மாதங்கள் வீதம் இரண்டு கற்கைத் தவணைகள் மற்றும் மூன்று மாதகால வெளிக்களப் பயிற்சி மேற்படி அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், கூட்டுறவுத் தொழில்முயற்சி மற்றும் அதன் நடவடிக்கைகள் தொடர்பிலான ஆரம்ப அறிவும், கூட்டுறவுத் தொழில்முயற்சியை சமூகமயப்படுத்தத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.

1.7.3.2. கணினிப் பிரயோக உதவிச் சான்றிதழ் பாடநெறி

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் கணினிப் பிரிவினால் கணினிப் பிரயோக உதவிச் சான்றிதழ் பாடநெறி, தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 03 இன் கீழ் நடாத்தப்படுகின்றது. அதற்கு கணினி அறிவை எதிர்பார்த்துள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். கணினிப் பிரயோக பயன்பாட்டிலுள்ள ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கும், தொழில்சார்

தகைமையொன்றாக தகைமைகளை வளர்த்துக் கொள்வதற்கும் இப்பாடநெறி நடாத்தப்படுகின்றது.

1.7.4 தொழில்சார் பாடநெறிகள்

முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறியொன்று 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது.

1.7.5 குறுங்கால பாடநெறிகள்

2021 ஆம் ஆண்டில் 20 குறுங்கால பாடநெறிகளில் 09 நடாத்தப்பட்டன.

1.7.5.1 வங்கி ஒழுங்குறுத்தல்களை அறிமுகம் செய்வது பற்றிய பயிற்சிச் செயலமர்வு

நுண்நிதித்துறைகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு சனச சங்கங்களின் பதவியணியினரை இலக்காகக் கொண்டுள்ள இந்தப் பாடநெறி நடாத்தப்படுவதுடன், இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது வங்கி முறையியல் பற்றிய தொழில்சார் அனுபவத்தைக் கொண்டுள்ள மனித வளத்தை இந்த சங்கங்களில் ஏற்படுத்துவதாகும். வங்கியொன்றில் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும் என்பதுடன் தமது நிதிக்கு நல்லதொரு பாதுகாப்பு இருப்பதாக உறுதி செய்தல் வேண்டும். மேலும், கோரிக்கை விடுக்கும் போது தமது நிதியை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். இந்நிலைமையை நீண்டகாலத்திற்குப் பேணிவருவது இந்த அமைப்புக்களின் பொறுப்பொன்றாகும் என்பதனால் இதற்காக வங்கிகளுக்கு தரநியமங்களை அறிமுகம் செய்து உரிய ஒழுங்குறுத்தல் முறையியலின் அடிப்படையில் பயணிக்கத் தேவையான வழிகாட்டலை இந்த சங்கங்களின் அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். தற்போது இந்த சங்கங்களிலுள்ள அலுவலர்களுக்கு தொழில்சார் வங்கியியல் பற்றிய ஆகக் குறைந்த அறிவே காணப்படுவதனால் இதற்காக தொடர்ச்சியான பயிற்சிகளி வழங்கி சிறு நிதித்தொழிலில் நாளாந்தம் இடம்பெறுகின்ற மாற்றங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன், இந்த அறிவை இற்றைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. 26 பேரின் பங்கேற்புடன் நடாத்தப்பட்ட இப்பாடநெறி மூலம் சுமார் ரூ. 161,160 ஆன தொகை 2021 ஆம் ஆண்டில் உழைத்துக் கொள்ளப்பட்டது.

1.7.5.2 ஆய்வுக் கட்டுரையொன்றை தயார் செய்வதை அறிமுகம் செய்யும் செயலமர்வு

கூட்டுறவு அபிவிருத்தி அலுலவர்களுக்கான தரம் 1 இன் வினைத்திறன் காண் தடையாக மேற்படி ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் 8.1 இற்கமைய கூட்டுறவு சட்டம், கூட்டுறவு வரலாறு, கூட்டுறவுப் பயன்பாடு மற்றும் புதிய போக்குகள் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட தலைப்பொன்றின் கீழ் 5000 சொற்களுக்குக் குறையாதவாறு ஆய்வுக் கட்டுரை ஒன்றை தயார் செய்தல் வேண்டும். அதற்கமைய தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்படி அலுவலர்களுக்கு குறித்த வினைத்திறன் காண் தடையை வெற்றிகரமாக நிறைவு செய்துகொள்வதற்காக முழுமையான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது. இதன் போது ஒவ்வொரு ஆராய்ச்சியாளருக்கும் தெரிவு செய்யப்பட்ட ஆராய்ச்சி சிக்கலொன்றின் ஊடாக தமது ஆய்வுக் கட்டுரையை தயார் செய்துகொள்ளத் தேவையான முழுமையான வழிகாட்டல் 03 நாள்

செயலமர்வின் மூலம் வழங்கப்படுகின்றது. இதனை அடுத்து தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற மேற்பார்வையாளர் ஒருவரின் வழிகாட்டலின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் தமது ஆய்வுக் கட்டுரையை வெற்றிகரமாக நிறைவு செய்து தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்திடம் கையளிப்பார்கள். இதனை அடுத்து மேற்படி ஆய்வுக் கட்டுரை சுயாதீன பரிசோதகர் ஒருவரினால் மதிப்பீடு செய்யப்பட்டு மாணவர்களின் இறுதி புள்ளிகள் வெளியிடப்படும். மேற்படி ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் ஆய்வு ஜேர்னலான இலங்கை கூட்டுறவு ஆய்வுச் சஞ்சிகையில் இலவசமாக வெளியிடப்படும்.

1.7.5.3 கணக்காய்வு நியமங்களைப் பயன்படுத்துவது பற்றிய திறன் அபிவிருத்தி பயிற்சிச் செயலமர்வு

கூட்டுறவுச் சங்கங்களில் வெளிக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அலுவலர்களின் கணக்காய்வுக் கடமை நடவடிக்கைகளின் தரத்தை அபிவிருத்தி செய்வது கொள்வது தொடர்பிலான கோட்பாடுசார் மற்றும் செயன்முறை அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்தக் குறுங்கால செயலமர்வு தயார் செய்யப்பட்டுள்ளது.

1.7.5.4 கடன் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு

கிராமிய நிதி நிறுவனங்களில் பிரதானமாக முகாமைத்துவம் செய்ய வேண்டிய பணியாக இருப்பது உறுப்பினர்களின் கடனை முகாமைத்துவம் செய்வதாகும். நிறுவனத்தின் நிலைபேறானதன்மைக்கு பிரதானமாக தாக்கம் செலுத்தும் காரணியாக இருப்பது தரமான கடன் முறையைப் பேணிவரவேண்டிதயன் அவசியத்தன்மையாகும். இதற்காக கிராமிய நிதி நிறுவனங்களிலுள்ள வெளிக்கள அலுவலர்கள் சிறந்த அறிவைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்காக இப்பாடநெறியின் மூலம் இலக்காகக் கொள்ளப்படுவது அவ்வாறான அலுவலர்கள் குழுவை பயிற்றுவித்து இத்துறைக்கு விடுவிப்பதாகும். மேலும், நிதி நிறுவனமொன்று சிறந்த கடன் கலாசாரத்தை ஏற்படுத்திக் கொண்டு வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய முறையியல்கள் பற்றி இந்தப் பாடநெறியின் போது கலந்துரையாடப்படுகின்றது. அதற்கமைய இப்பாடநெறியை, நிறுவனத்தின் நிலைபேறான தன்மையைப் பேணிவருதல் மற்றும் நிறுவனத்தின்முகாமைத்துவத்துக்கு அதன் நிருவாகத்தை இலகுபடுத்துகின்ற கட்டாயமாக கிராமிய நிதி நிறுவனங்களின் அலுவலர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடநெறியாகும் என அறிமுகம் செய்ய முடியும்.

1.7.5.5 மத்தியஸ்தம் செய்யும் திறன்களை அபிவிருத்தி செய்யும் பயிற்சிச் செயலமர்வு

கூட்டுறவு அமைப்புக்களில் பல்வேறு வகையில் வரைவிலக்கணம் செய்யப்படுகின்ற பலதரப்பட்ட பிணக்குகள், அவற்றுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மத்தியஸ்தம் செய்யும் கோட்பாடுகளுக்கு அமைய தீர்த்துவைப்பதற்கான வழிகாட்டல்கள் பற்றிய புரிந்துணர்வை மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களங்களில் அது சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுகின்ற அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த குறுங்கால நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது,

1.7.5.6 கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் நிதிச் சங்கங்களுக்கான முதலீட்டுத் துறைசார் முகாமைத்துவம்

கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் எண்ணிக்கையானவை தமது மேலதிக நிதியை நீண்டகால முதலீட்டு வழிகளில் முதலீடு செய்ய முனைந்துள்ளன. எனினும், இந்த சங்கங்களுக்கு அபாயமற்ற அல்லது அபாயத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடிய முதலீட்டு வழிமுறைகளில் நிதியை முதலீடு செய்வதற்கான அறிவு மற்றும் திறமைகளைக் கொண்டுள்ள மனிதவளத்தை நிறுவகத்திற்குள் இல்லாமை காரணமாக அதற்குரிய மனிதவளத்தை விரைவில் பயிற்றுவிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதற்கான குறுங்கால செயலமர்வொன்றை முதலில் திட்டமிட்டு நடாத்தவேண்டிதயன் துரித தேவை எழுந்துள்ளது.

1.7.5.7 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான பயிற்சி

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றின் பிரதம நிறைவேற்று அலுவலராக பொது முகாமையாளர் செயற்படுகின்றார். எனவே, வெற்றிகரமான செயற்பாட்டை பேணிவருவதற்காக ஒட்டுமொத்த பதவியணியினரையும் வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்கவாறு வழிப்படுத்தும் முக்கிய பொறுப்பு தவிசாளருக்கு உரித்தாவதுடன், அது தொடர்பில் முகாமைத்துவ சபைக்கு அவர் பொறுப்புக்கூற வேண்டும்.

எனவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று முகம்கொடுத்துள்ள சமகால சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு கூட்டுறவுச் சங்கங்களை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்து வெற்றிகரமாக வழிப்படுத்துவதற்குத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்தப் பயிற்சிப் பாடநெறி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

1.7.5.8 கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் கணக்காய்வுப் பயிற்சிச் செயலமர்வு

பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றில் நியாயாதிக்க வெளிக் கணக்காய்வுப் பணிகளை நிறைவேற்றுவது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சுயாதீன கணக்காய்வாளர்களினாலாகும்.

தமது சேவை பெறுநரான கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தயார் செய்யப்படும் கணக்குக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களை அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மாதிரியமைப்புக்கு ஏற்புடையவாறு உண்மையான மற்றும் நியாயமான அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதை கடும் தொழில்சார் பரிசோதனையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் ஒழுக்கநெறிகள் மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய தமது சான்றுப்படுத்தும் சேவை வழங்கப்படல் வேண்டும்.

இதற்கு மாகாண மற்றும் நேர்வரிசை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சுயாதீன கணக்காய்வாளர்களான கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்குரிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்த இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

1.8 நிறுவகத்தின் எதிர்கால எதிர்பார்ப்புக்களும், சவால்களும்

1.8.1 எதிர்கால எதிர்பார்ப்புக்கள்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் கூட்டுறவு முயற்சியின் முன்னேற்றத்திற்காக போதியளவிலான செயற்பணியை நிறைவேற்றுகின்ற போதிலும் கூட்டுறவுத் துறையின் சவால்களை நிலைபேறாக வெற்றிகொள்வதற்கான நிறுவன ரீதியான கொள்ளளவை மென்மேலும் வளர்த்துக்கொள்ளல் வேண்டும். அதற்கமைய எதிர்காலத்தில் தொடர்ந்தும் அடைந்துகொள்ள வேண்டிய எதிர்பார்ப்புக்கள் பின்வருமாறாகும்.

I. பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தி கூட்டுறவு பட்டப் பாடநெறியொன்றை அறிமுகம் செய்வது வரை வளர்த்தல்.
நிறுவகத்தினால் தற்போது சுமார் 11 டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன், மேற்படி பாடநெறிகளுக்கு ஏஞ மற்றும் ளுடுஞகு மட்டங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அதனூடாக கூட்டுறவுத் துறை தொடர்பிலான பட்டப் பாடநெறிகளை எதிர்காலத்தில் அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.

II. கூட்டுறவுத் துறையின் ஆய்வுகளை விளைதிறன்மிக்கவாறு மேம்படுத்தல்.
கூட்டுறவு தொழில்முயற்சியின் ஆய்வுகளை விளைதிறன்மிக்கவாறு மேம்படுத்து கூட்டுறவுத் துறையில் தரமான தன்மையைக் கொண்ட ஆய்வுகளை வெளிக்கொண்டுவருவது தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் எதிர்கால எதிர்பார்ப்பாகும்.

III. சுயநிதிய முறையை அடைந்துகொள்ளல்
வருமானம் உழைக்கும் நிறுவனம் என்ற வகையில் இயங்கிவருகின்ற போதிலும் வருடாந்த மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களை ஈடுசெய்துகொள்வதற்கு திறைசேரியிடமிருந்து ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இது வருடாந்த செலவில் சுமார் 50% ஆகும் என்பதுடன், இத்தொகையைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு சுய நிதியை உழைக்கும் நிறுவனமாக மாற்றியக் கொள்வது நிறுவகத்தின் எதிர்பார்ப்பாகும்.

IV. பயிற்றப்பட்ட விகிதத்தை வளர்த்துக் கொள்ளல்.
கூட்டுறவுத் தொழில்முயற்சியிலுள்ள ஒட்டுமொத்த பதவியணியில் வருடாந்தம் பயிற்சிகளில் ஈடுபடுவது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோராவார்கள். இதற்கான காரணம் அறவீடுகள் இன்றி பயிற்சி வழங்குவதற்கு நிறுவகத்திற்கு உரித்தான நிதியம் இல்லாமையும், அதற்கு திறைசேரியின் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையுமாகும். இந்த நிலைமையை மாற்றியமைத்து பயிற்சிகளில் பங்கேற்பதை வளர்ப்பது நிறுவகத்தின் நோக்கமாகும்.

V. பயிலுனர்களின் மென்திறன்களை வளர்த்துக் கொள்ளல்.

VI. கூட்டுறவுத் தொழில்முயற்சியுடன் சம்பந்தப்பட்ட பயிலுனர்களின் மென் திறன்களை வளர்ப்பதற்காக பல்வகைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்தல்

1.8.2 சவால்கள்

I. 2001 ஆம் ஆண்டு தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமாக கூட்டிணைக்கப்பட முன்னர் இந்த நிறுவகம் இலங்கைக் கூட்டுறவுக் கல்லூரியாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இயங்கிவந்ததுடன், அக்காலப்பகுதியில் கல்லூரியினால் கூட்டுறவுப் பரிசோதகர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்க அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததுடன், அதற்கு அரசாங்க ஏற்பாடுகள் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக இந்த நிறுவனத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
2001 ஆம் ஆண்டு கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகமாக 2001 இன் 01 ஆம் இலக்க கூட்டுறவு சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட நிறுவகமாக மாற்றியமைக்கப்பட்டதை அடுத்து அலுவலர்களை பயிற்றுவிக்கும் பணிக்கு

மேலதிகமாக கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பிலான பிரதான 10 பணிகளை அமுல்படுத்துவதற்கு சட்டத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் இதன் 1.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. நேம்படி பணிகளை முழுமையாக நிறைவேற்றுவதற்காக வருடாந்தம் பாரியளவில் நிதியை செலவிட வேண்டி ஏற்படுகின்ற போதிலும் திறைசேரியினால் இந்த நிறுவகத்திற்கு வருடாந்தம் ஒதுக்கப்படுவது சுமார் ரூ.மி. 60 ஆன தொகை மாத்திரமாகும். மேற்படி நிதி ஒதுக்கப்படுவது பதவியணியினருக்கான கொடுப்பனவுகள், மின்சாரம், நீர், தொலைபேசி உள்ளிட்ட அத்தியாவசியமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் செலவினங்களைச் செய்ய வேண்டிய ஏற்படும் தொகையின் ஒருபகுதிக்கு மாத்திரமாகும்.

எனினும் கூட்டுறவு தொழில்முயற்சியாளர்களினால் எதிர்பார்க்கப்படுவது கூட்டுறவுக் கல்லூரி காணப்பட்ட காலப்பகுதியைப் போன்ற அறவீடுகள் இன்றி பாடநெறிகள் நடாத்தப்படும் என்றாகும். பாடநெறிக் கட்டணங்கள் அறவிடப்படுகின்ற பயிற்சி நடவடிக்கைகளில் கூட்டுறவுத் தொழில்முயற்சிகளின் பதவியணியினர் பங்கேற்பது குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. இதற்கமைய பதவியணியைப் பயிற்றுவிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்களை அடைந்துகொள்ளும் நிலை கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது.

II. இலங்கை கூட்டுறவுத் தொழில்முயற்சியானது 13 ஆவது திருத்தத்தின் கீழ் பன்முகப்படுத்தப்பட்ட விடயமாக இயங்கிவருவதனால் முழு இலங்கைக்கும் ஏற்புடையவாறு பயிற்சியளித்தல், ஆலோசன வழங்குதல் மற்றும் ஏனைய பணிகளின் போது சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு செயற்படுவதிலுள்ள சவால்கள்

III. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் தமது பயிற்சித் தேவைகளை காலத்திற்கு ஏற்றவாறு இனங்காணல் மற்றும் மேற்படி பயிற்சித் தேவைகளை நிறுவனத்திடம் சமர்ப்பிப்பதற்கான செயல் ரீதியான ஒருங்கிணைப்பை கட்டியெழுப்புவதிலுள்ள அசௌகரியங்கள்

IV. இலங்கை கூட்டுறவுத் தொழில்முயற்சியின் ஊழியர் சமுதாயத்தினருக்குக் கிடைக்கின்ற பயன்கள் கீழ் மட்டத்தில் காணப்படுவதனால் அவர்களை பயிற்சிப் பணிகளில் சாதகமானவாறு ஈடுபடுத்திக் கொள்வதிலுள்ள அசௌகரியங்கள்.

V. இலங்கை கூட்டுறவு தொழில்முயற்சியின் கூட்டுறவு சங்களின் முகாமைத்துவம் மற்றும் அலுவலர்கள் பயிற்சிப் பணிகளில் ஈடுபடுவதிலுள்ள விருப்பமின்மை மற்றும் அதற்குப் போதியளவு செலவினங்களை தாங்கிக் கொள்வதிலுள்ள விருப்பமின்மை.

2.

நிறுவனம்சார் நிருவாகம் மற்றும் நிருவாக நடவடிக்கைகளின் முன்னேற்றம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் பிரதான நிருவாக அலகாக நிறுவகத்தின் முகாமைத்துவ சபை காணப்படுகின்றது. மேலும் கற்கை நடவடிக்கைகள் தொடர்பில் நிறுவகத்தின் கற்கை சபை செயற்படுவதுடன், உள்ளக கணக்காய்வுக் குழு நிறுவகத்தின் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்கின்றது.

2.1 முகாமைத்துவ சபை மற்றும் அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம்

முகாமைத்துவ சபையானது நிறுவகத்தின் நடவடிக்கைகளை நிருவகித்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்துவதை மேற்கொள்வதுடன் நிறுவகத்தை தாபிப்பதற்கான சட்டத்தினால் நிறுவகத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பணிகள் அமுல்படுத்துகின்றது. நிறுவகத்தின் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரிப்பது முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2.1.1 முகாமைத்துவ சபையின் ஒழுங்கமைப்பு

நிறுவகத்தின் முகமைத்துவ சபையானது பின்வரும் ஆட்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

(அ) பதவி வழியாக நியமனம் பெறும் உறுப்பினர்கள்

i. கூட்டுறவு அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக, சமகாலத்தில் பதவி வகிக்கின்ற அல்லது அவரினால் பெயரிடப்படுகின்ற ஆளொருவர்,

ii. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,

iii. இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தவிசாளர்.

iv. இலங்கை கூட்டுறவு முகாமைத்துவ நிறுவகத்தின் தவிசாளர் மற்றும் (இந்த நிறுவகம் தற்போது இயங்குவதில்லை.)

v. 16 ஆம் பிரிவின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ள, நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்.

(ஆ) அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள்

i. கூட்டுறவுத் துறையில் பரந்த அனுபவமும், முகாமைத்துவம் பற்றிய அனுபவமும் உள்ள ஆட்களிலிருந்து கூட்டுறவு விடயப்பொறுப்பு அமைச்சரினால் பெயரிடப்படுகின்ற ஆட்கள் மூவர்.

ii. உயர் கல்வி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படுகின்ற உயர் கல்வி அமைச்சின் பிரதிநிதி ஒருவர் மற்றும்

iii. நிதி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்படுகின்ற உயர் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் மற்றும்

iv. நியமனம் செய்யப்படுகின்ற ஆட்களில் ஒருவர் முகாமைத்துவ சபையின் தவிசாளராக அமைச்சரினால் நியமனம் செய்யப்படுவார்.

2.1.2 2021 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் விபரம்

தொடர் இல.	பெயர்	பதவி	நிரந்தர பதவி	நியமனத்தின் தன்மை
1.	திரு ஜே.ஆர்.டபிள்யு. திசாநாயக்க	தவிசாளர், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்	தவிசாளர்	நியமனம் செய்த உறுப்பினர்
2.	திரு ஜி.எச்.எம்.ஏ. பிரேமசிங்க	பணிப்பாளர் நாயகம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்	உறுப்பினர்	பதவி வழியாக
3.	திரு சுவிந்த எஸ். சிங்கப்புலி	கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளர் (மத்திய அரசு) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் (மத்திய அரசு)	உறுப்பினர்	பதவி வழியாக
4.	திருமதி எல்.ஏ.ஜி.என். லியனஆரச்சி	பணிப்பாளர் (அபிவிருத்தி) கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு	உறுப்பினர்	பதவி வழியாக
5.	திரு ஜே.எம். ஹேரத் பண்டா	பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்	உறுப்பினர்	பதவி வழியாக
6.	திரு ஜி.ஆர்.கே.எஸ். கனேகொட	கணக்காளர், உயர் கல்வி அமைச்சு	உறுப்பினர்	பதவி வழியாக
7.	திரு ஜி.டி.எஸ். வீரசிறி	தவிசாளர், தேசிய கூட்டுறவுச் சபை	உறுப்பினர்	பதவி வழியாக
8.	திரு கே.டி. பீரிஸ்	முகாமைத்துவ சபை உறுப்பினர்		நியமனம் செய்த உறுப்பினர்

2.1.3 2021 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சபையின் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் தீர்மானங்களை மேற்கொண்டமை பற்றிய முன்னேற்றம் பின்வருமாறாகும்.

தொடர் இல.	கூட்டத் திகதி	பங்கேற்பு	சமர்ப்பிக்கப்பட்ட முகாமைத்துவ பத்திரங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை
01.	**2021.02.05**	தவிசாளர் உட்பட 07 பேர்	**03**	**03**
02.	**2021.02.23**	தவிசாளர் உட்பட 06 பேர்	**09**	**16**
03.	**2021.04.24**	தவிசாளர் உட்பட 05 பேர்	**19**	**31**
04.	**2021.06.25**	தவிசாளர் உட்பட 05 பேர்	**19**	**35**
05.	**2021.08.24**	தவிசாளர் உட்பட 08 பேர்	**19**	**33**
06.	**2021.10.29**	தவிசாளர் உட்பட 08 பேர்	**15**	**28**

07.	**2021.12.15**	தவிசாளர் உட்பட 06 பேர்	**29**	**37**

2.2. 2021 ஆம் ஆண்டுக்கான கற்கை சபை மற்றும் அதன் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைசார் தீர்மானங்களுக்கு அமைய நிறுவகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல், பாடநெறிகள் மற்றும் பாடவிதான அபிவிருத்தி, பரீட்சைகளை நடாத்தல், மதிப்பீடு பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பிலான சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல், சான்றிதழ்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலான நிபந்தனைகளை விதித்தல் போன்ற நடவடிக்கைகள் கற்கை சபையின் செயற்பணியாக இருக்கும்.

2.2.1. கற்கை சபையின் ஒழுங்கமைப்பு

2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 12(1) இற்கு அமைய நிறுவகத்தின் கற்கைச் சபை முகாமைத்துவ சபையினால் நியமனம் செய்யப்படுகின்ற பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கற்கை சபையின் ஒழுங்கமைப்பு பின்வருமாறாகும்.

I. கற்கை சபையின் தவிசாளராக இருக்க வேண்டிய நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்,

II. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழக சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயரிடப்படுகின்ற பல்கலைக் கழக கல்விசார் பதவியணியின் பிரதிநிதியொருவர்,

III. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர்,

IV. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் பெயரிடப்படுகின்ற பிரதிநிதி ஒருவர், மற்றும்

V. அமைச்சரின் விருப்பத்தின் பேரில், முகாமைத்துவம் தொடர்பிலான அனுபவமும், பயிற்சியும் பெற்றுள்ள கூட்டுறவுத்துறை அல்லது தனியார் துறையிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற ஆளொருவர்,

2.2.2. 2021 ஆம் ஆண்டுக்கான கற்கை சபையின் பிரதிநிதிகள்

பெயர்	பதவி	நியமனத்தின் தன்மை
1. திரு ஜி.எச்.எம்.ஏ. பிரேமசிங்க	பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்	சட்டத்துக்கு அமைய நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கற்கை சபையின் தவிசாளராவார்.
2. பேராசிரியர் திரு ஜி.எச்.எம்.ஏ. பிரேமசிங்க	பேராசிரியர், பொருளியல், பேராதனை பல்கலைக் கழகம்	சட்டத்துக்கு அமைய பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் பிரதிநிதி
3. திருமதி கே.டி.ஜி.எம். அபேகுணசேகர	பரீட்சைகள் ஆணையாளர் (ஆராய்ச்சி/அபிவிருத்தி மற்றும் மதிப்பீடு) இலங்கை பரீட்சைகள் திணைக்களம்	சட்டத்துக்கு அமைய பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் பிரதிநிதி

4. திரு சுவிந்த எஸ். சிங்கப்புலி	கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளர் (மத்திய அரசு) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்	சட்டத்துக்கு அமைய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பிரதிநிதி
4. திருமதி எல்.ஏ.ஜி.என். லியனாரச்சி	பணிப்பாளர் (அபிவிருத்தி) கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு	
5. திரு ஜி.ஏ. நிமல்	கற்கை சபையின் உறுப்பினர்	சட்டத்துக்கு அமைய அமைச்சரின் விருப்பத்தின் பேரில் நியமனம் பெறும் பிரதிநிதி

2.2.3. 2021 ஆம் ஆண்டின் கற்கை சபையின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

திகதி	பங்கேற்பு	சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் ∴ ஆலோசனைகளின் எண்ணிக்கை
2021/01/07	05	05	12
2021/06/14 (ஒன்லையின்)	04	-	-
2021/12/07	04	09	12

2.3. க ண க்காய்வு முகாமைத்துவக் குழு மற்றும் அதன் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் நிறுவகத்தின் கணக்காய்வு முகாமைத்துவக் குழு செயற்பட்டு வருவதுடன், நிறுவகத்தின் கணக்காய்வு வினாக்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு வினாக்களுக்கு அமைய சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் இக்குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்படும்.

2.3.1. கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் ஒழுங்கமைப்பு

i. முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மூவர்

ii. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவர்

iii. நிறுவகம் உரித்தான அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

iv. நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வாளர் - ஏற்பாட்டாளர்

2.3.2. 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் பிரதிநிதிகள்

தொடர் இல.	பெயர்	பதவி
01	திரு ஜே.எம். ஹேரத் பண்டார	பணிப்பாளர் - தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
02	திரு சுமிந்த எஸ். சிங்கப்புலி	கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், சங்கப் பதிவாளர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
03	திருமதி எல்.ஏ.ஜி.என். லியனஆரச்சி	பணிப்பாளர் (அபிவிருத்தி), கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு பதில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு சங்கப் பதிவாளர் - கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
04	திரு ஜி.ஆர்.கே.எஸ். கனேகொட	கணக்காளர், உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
05	திருமதி ரி.ஜி.எஸ். நிலக்ஷிகா	கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்
06.	திரு மில்லத் மாஹிர்	பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு
07	திருமதி எஸ்.எம். ராஜபக்ஷ	பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு
08.	செல்வி ஆர்.ஏ.ஏ.எச். பிரேமசந்திர	உள்ளகக் கணக்காய்வாளர், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்

2.3.3. 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

திகதி	பங்கேற்பு	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்
2021.02.19	05	13
2021.07.09	05	21
2021.10.15	06	11
2021.12.27	06	15
மொத்தம்		60

3.

2021ஆம் ஆண்டுக்கான நிறுவகத்தின் முன்னேற்றம்

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டிலும் சிறந்த செயற்பணியை நிறைவேற்றக்கூடியவாறு நிறுவன நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டு முழுவதிலும் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் பரவல் மற்றும் அதற்கமைய இந்த நிறுவகமும் தனிமைப்படுத்தல் நிலையமாக செயற்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு இலக்குசார் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியவில்லை. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையானது நிறுவனத்தின் நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்திய முறை கீழே தரப்பட்டுள்ளது.

i. கொவிட் 19 தொற்றுநோய் பரவல் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு நிறுவகத்தின் ஒரு பகுதி (விடுதி, சிற்றுண்டிச்சாலை, சமையறை, பிரவேசப் பாதை வசதிகள் போன்ற பகுதிகள்) பொறுப்பளிக்கப்பட்டதனால் வதிவிட பாடநெறிகளை நடாத்துவதை முற்றாக நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

ii. மேலும், இந்நிலைமையின் அடிப்படையில் பல்வேற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வெளி நிறுவனங்களிடமிருந்து கிடைத்த கோரிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டமை மற்றும் வருமானம் குறைவடைந்தமை.

iii. தனிமைப்படுத்தல் நிலையமொன்று நிறுவக வளவில் தாபிக்கப்பட்டிந்ததனால் வெளித் தரப்பினர்கள் நிறுவகத்திற்கு வருகைதருவதில் காட்டிய விருப்பமின்மையின் காரணமாக நிறுவன வசதிகளை வழங்குவதற்கு கோரிக்கைகள் கிடைக்காமையினால் வருமானத்தை இழந்தமை.

iv. பாரியளவில் ஆட்கள் ஒன்றுகூடுவதன் மூலம் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு இந்த நிறுவகத்தின் கேட்போர்கூடம், பிரதான மண்டபம் மூலம் வெளியாருக்கு சேவையாற்றப்படுகின்ற போதிலும் நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக ஆட்கள் ஒன்றுகூடலுக்கு மட்டுப்பாடு விதிக்கப்பட்டதனால் நிறுவனத்தின் மேற்படி வசதிகளை வெளியாருக்கு பெற்றுக் கொடுப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை பெற்றக் கொள்ள முடியவில்லை. மேலும் சிறு குழுக்களின் களியாட்ட நிகழ்வுகளுக்கு தங்குமிட வசதிகளை செய்துகொடுக்கும் சுற்றுலா விடுதி வசதிகளும் அப்போது நிலவிய பயணத் தடைகள் காரணமாக வெளித்தரப்பினருக்குப் பெற்றுக் கொடுக்க முடியில்லை.

v. மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடைகள் விதிக்கப்பட்டதனால் நாடு முழுவதிலும் பரந்துள்ள கூட்டுறவுத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நடாத்தப்படவிருந்த குறுங்கால பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டமை.

vi. ஒன்லையின் முறையின் ஊடாக பாடநெறிகளுக்கான விரிவுரைகளை நடாத்துவது ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக பௌதீக வளங்கள் நல்ல முறையில் பயன்படுத்தப்படாமை மற்றும் இதனால் வருமானம் இழக்கப்பட்டமை.

vii. நிறுவகத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட 44 பதவிகளில் 17 தொடர்பில் 28 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடிந்தமை நிறுவகத்தின் மனிதவள அபிவிருத்திக்குக் காரணமாக அமைந்தது.

viii. பல வருடங்களாக நிறுவகத்தின் பதவியணிக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை நடாத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மேற்படி பரீட்சைகளை நடாத்தி அவர்களின் சம்பள ஏற்றங்களை செலுத்தி ஊழியர்களின் சிக்கல்களை முடிந்தளவு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான தடைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியிலாயினும், 2021 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் சகல பிரிவுகளும் பின்வருமாறு இலக்குகளை அடைந்துகொள்வதற்கும், முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

3.1. தாபன மற்றும் நிருவாகப் பிரிவின் முன்னேற்றம்

இந்த நிறுவகத்தின் தாபன மற்றும் நிருவாகப் பிரிவானது, பதிவாளர் உட்பட 27 பேரைக் கொண்ட பதவியணியைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் 2021 ஆம் ஆண்டில் வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளில் நிருவாக அலுவலர் (பரீட்சை) பெறுகை அலுவலர், சந்தைப்படுத்தல் அலுவலர், கற்புல, செவிப்புல அலுவலர் ஆகிய 4 பதவிகளுக்கும், கற்புல செலவிப்புல தொழில்நுட்ப உதவியாளர் பதவி 01 இற்கும், முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 06 இற்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டன. அதற்கமைய 2021.12.31 ஆம் திகதிக்கு தாபன மற்றும் நிருவாக பிரிவு 17 பேரைக் கொண்டதாகக் காணப்பட்டதுடன், மேலும் இப்பிரிவில் 10 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. தாபன அலுவல்கள், பரீட்சை அலுவல்கள், பெறுகை அலுவல்கள், நிறுவன இணையத்தளத்தை இற்றைப்படுத்தும் பணிகள், பரீட்சை நடவடிக்கைகள், வாகன அலுவல்கள், மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் போன்ற கடமை நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

3.1.1 மனிதவள அபிவிருத்தி

அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	71
2021.12.31 ஆம் திகதியில் இருந்தவாறான பதவியணி	50
2021.12.31 ஆம் திகதிக்கு வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை	23

2021.12.31 ஆம் திகதிக்கு வெற்றிட எண்ணிக்கையான 44 இல் 14 பதவிகள் தொடர்பில் 28 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதற்கமைய 26 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்கள்.

2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வுகளின் எண்ணிக்கை	- 00
2021 ஆம் ஆண்டில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட எண்ணிக்கை	- 00
2021 ஆம் ஆண்டில் ஓய்வுறுத்தல்களின் எண்ணிக்கை	- 01
2021 ஆம் ஆண்டில் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை	- 15
2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பதவியணிக் கூட்டங்களின் எண்ணிக்கை	- 06

3.1.2 பௌதீக வள அபிவிருத்தி

	தொகை
இயந்திர சாதனங்கள், அலுவலக உபகரணம் கொள்வனவு	ரூபா மில்லியன் 07

3.1.3 பெறுகை நடவடிக்கைகள்

	தீர்மானங்களின் எண்ணிக்கை	நிதிசார் பெறுமதி ரூ.
திணைக்கள பெறுகை	10	22.11
சிறு பெறுகை	44	03.702
மொத்தம்	**54**	**25.812**

3.1.4 பரீட்சைகளை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல்

	உள்ளக	வெளியாரின் கோரிக்கையின் பேரில்	மொத்தம்
நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை	27	06	33
பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை	358	530	888
சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை	261	-	-
சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை	13	-	-
குறைச் சித்திகளின் எண்ணிக்கை	29	-	-
ஏனையன	22	-	-

2021 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதன் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

பாடநெறி	மாணவர்களின் எண்ணிக்கை (KPI)				
	தோற்றிய	சித்தி	குறைச் சித்தி	சித்தி பெறாத	வேறு
1. Office Automation – 2019/2020	10	07	03		
2. E-kids Computer Learning – 2019.∴2020	11	11	-	-	
3. கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறி - 2019 (வட மத்திய மாகாணம்)	30	21	-	07	02
4. வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2019/2020	32	24	04	-	04
5. வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2019/2020	24	20	01	-	03
6. கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி - 2019/2020	31	27	02	-	02
7. கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி - 2019/2020	16	08	04	-	04
8. தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி - 2019/2020	18	08	06	-	04
9. வியாபார முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி - 2019/2020 (ஐ தவணை)	22	-	-	-	-
10. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2020 (I தவணை)	11	-	-	-	-

11. கூட்டுறவு அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி - 2019/2020 (வடமேல்/ மேல்)	66	62	02	-	02
12. கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறி - 2019/2020 (சபரகமுவா/ மேல்)	44	36	03	04	01
13. மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2019	15	10	03	02	-
மொத்தம்	**330**	**234**	**28**	**11**	**22**

மீட்டல் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்

பாடநெறி	மாணவர்களின் எண்ணிக்கை				
	தோற்றிய	சித்தி	குறைச் சித்தி	சித்தி பெறாத	வேறு
01. வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2011/2012	01	01	-	-	-
02. வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2013/2014	01	01	-	-	-
03. Office Automation – 2019/2020	03	03	-	-	-
04. கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறி - 2019 (ஊவா /தெற்கு /மத்திய மாகாணம்)	01	01	-	-	-
05. கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறி - 2018 (மத்திய அரசு /தென் மாகாணம்)	01	01	-	-	-
06. தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி - 2018/2019	01	01	-	-	-
07. வியாபார முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி - 2018/2019	03	02	01	-	-
08. கூட்டுறவு அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறி - 2019 (வட மத்திய மாகாணம்)	03	03	-	-	-
09. வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2019/2020	04	04	-	-	-
10. வியாபார முகாமைத்துவம் டிப்ளோமா பாடநெறி - 2019/2020	01	01	-	-	-
11. கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி - 2019/2020	02	02	-	-	-
12. கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி - 2019/2020	04	04	-	-	-
13. தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி - 2019/2020	02	02	-	-	-
14. தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி - 2018/2019	01	01	-	-	-
மொத்தம்	28	27	01		

3.2 கற்கைப் பிரிவின் முன்னேற்றம்

பாடநெறிகளை திட்டமிடல் மற்றும் நடாத்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகள், ஆலோசனை சேவை நடவடிக்கைகள், நூலக நடவடிக்கைகள், மாணவர்களின் நடவடிக்கைகள் போன்ற கடமைசார் நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கற்கைப் பிரிவானது, பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி) இன் கீழ் இயங்கிவருவதுடன் இது கல்விசார் மற்றும் கல்விசாரா பதவிகளை உள்ளடக்கியது. அதற்கமைய நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்), விரிவுரையாளர்கள் 10 பேர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் 02 பேர் உட்பட 28 பேரைக் கொண்ட பதவியணியினரைக் கொண்டதாக இருக்க வேண்டுமாயினும், 2021 ஆம் ஆண்டில் விரிவுரையாளர்கள், நிருவாக அலுவலர் (மாணவர் அலுவல்கள்), சிரேஷ்ட நூலகர், உதவி நூலகர், ஆராய்ச்சியாளர் ஒருவர், கணினிப் போதனாசிரிகர்கள், அலுவலக சிற்றூழியர் உட்பட 25 பேருடன் மாத்திரம் இயங்கிவருகின்றது. இதற்கமைய பாடநெறிகளை நடாத்துவதற்கு வெளி வளவாளர்களை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டி ஏற்பட்டது.

3.2.1 பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டில் நிறுவகத்தினால் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் 23 நடாத்தப்பட்டுள்ளதுடன், பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 971 ஆகும். ஒவ்வொரு பாடநெறியினதும் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

3.2.1.1 பாடநெறிகளின் முன்னேற்றம் (03 மாதங்களுக்கு மேற்பட்டவை)

2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகள்

தொடர் இல.	பாடநெறியின் பெயர்	நடாத்தப்பட்ட தடவைகள்	பங்கேற்றோர்	பாடநெறி வருமானம் ரூ.
1.	முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி	01	15	934,000.00
2.	கணக்கியல் டிப்ளோமா பாடநெறி	01	36	944,000.00
3	தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி	01	12	530,000.00
	மொத்தம்	**03**	**63**	**2,408,000.00**

2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள்

தொடர் இல.	பாடநெறியின் பெயர்	நடாத்தப்பட்ட தடவைகள்	பங்கேற்றோர்	பாடநெறி வருமானம் ரூ.
	டிப்ளோமா பாடநெறி			
1.	வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2011/2012	01	33	1,032,000.00
2.	கணக்காய்வு டிப்ளோமா பாடநெறி 2021/2022	01	23	680,000.00
3.	முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு டிப்ளோமா பாடநெறி 2021/2022	01	7	320,000.00
4.	வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி - 2021/2022	01	39	1,168,000.00
5.	நுன்நிதி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2021/2022	01	32	264,000.00
6.	வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2021 (சிலாபம்/ புத்தளம் மாவட்ட கூட்டுறவு சபை)	01	27	448,000.00
7.	வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி (குளியாப்பிட்டி)	01	38	1,037,000.00
8.	கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய டிப்ளோமா பாடநெறி (மேல் /சபறகமுவா/ஊவா/மத்திய /வடமத்தி /தெற்கு/மத்திய அரசு)	01	68	231,040.00
	சான்றிதழ் பாடநெறி			
9.	கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய சான்றிதழ் பாடநெறி 2021 (மேல் /தெற்கு/ஊவா/வடமத்தி)	01	60	968,403.00
10.	கணினி செயலி உதவிச் சான்றிதழ் பாடநெறி	01	23	615,000.00
11.	கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய சான்றிதழ் பாடநெறி – 2021 (வடமேல் / மத்திய)	01	43	393,618.00
	மொத்தம்	**11**	**393**	**7,157,061.00**

3.2.1.2 குறுங்கால பாடநெறிகளை நடாத்துவதன் முன்னேற்றம்

தொடர் இல.	பாடநெறியின் பெயர்	நடாத்தப்பட்ட தடவைகள்	பங்கேற்றோர்	பாடநெறி வருமானம் ரூ.
01	கடன் முகாமைத்துவப் பயிற்சிச் செயலமர்வு	02	196	175,000.00
02	ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை தயார் செய்வதை அறிமுகம் செய்யும் செயலமர்வு	01	67	382,024.00
03	வங்கி ஒழுங்குறுத்தலை அறிமுகம் செய்யும் டிப்ளோமா பாடநெறி	01	26	161,160.00
04	கடன் முகாமைத்துவப் பயிற்சிச் செயலமர்வு (வெளியாரின் கோரிக்கையின் பேரில்)	01	50	58,200.00
05	மத்தியஸ்தம் செய்யும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	01	38	38,000.00
06	கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் நிதிச் சங்கங்களுக்கான முதலீட்டு முகாமைத்துவம்	01	35	11,400.00
07	கணக்காய்வு நியமங்களை அமுல்படுத்துவது பற்றிய செயலமர்வு	01	39	50,700.00
08	பலநோக்கு சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான பயிற்சி	01	20	12,000.00
09	கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கான கணக்காய்வு பயிற்சிச் செயலமர்வு	01	44	129,323.00
	மொத்தம்	**09**	**515**	**1,017,807.00**

3.2.2 ஆராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றம்

- பல்கலைக்கழக மாணவர்களை சம்பந்தப்படுத்திக் கொண்டு கூட்டுறவுத்துறை தொடர்பிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் ஆரம்ப கட்டப் பணியாக சபறகமுவா பல்கலைக் கழகத்தின் ஒரு மாணவி கூட்டுறவுக் கிராமிய வங்கித்துறை தொடர்பிலான ஆராய்ச்சிக் கற்கை ஆவணமொன்றை மேற்கொள்வதற்கு இந்த நிறுவகத்தின் நூலக வசதிகள் மற்றும் அதற்காக ரூபா 25,000 ஆன தொகை வழங்கப்பட்டன.

- மேலும், பேராதனை பல்கலைக் கழகத்தின் சமூகவியல் கற்கைப் பிரிவுடன் இணைந்து கூட்டுறவுத் துறையில் ஆராய்ச்சியொன்றை மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

3.2.3 ஆலோசனை நடவடிக்கைகளின் முன்னேற்றம்

அமைச்சின் ஆலோசனையின் பேரில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவசமாக ஆலோசனை சேவைகளை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்காக 125 சங்கங்கள் இனங்காணப்பட்டுள்ளன. மேற்படி சங்கங்களுக்கு ஆலோசகர்கள் 43 பேர் பெயரிடப்பட்டுள்ளார்கள். அதற்கமைய ப.நோ.கூ.சங்கங்கள் 21, சனச சங்கங்கள் 14, உற்பத்திச் சங்கங்கள் 72, சங்க சங்கங்கள் 2, ஒரு கூட்டுறவு வங்கி மற்றும் வேறு 10 சங்கங்களுக்கு இலவசமாக ஆலோசனை சேவைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.2.4 நூலக வசதிகளின் முன்னேற்றம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் நூலகமானது விசேட கற்கை நூலகமொன்றாக காணப்படுகின்றது. கூட்டுறவு தொழில் சம்பந்தமான சகல பாடங்களுக்கும் மேலதிகமாக கூட்டுறவு விடயப்பரப்பு சம்பந்தமான வணிகம் உள்ளிட்ட கணக்கியல், பொருளியல், வங்கியியல், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி முறையியல், சட்டம், சமூகவியல் மற்றும் சமூக வேலைகள், ஆலோசனை, சாதகமான மனப்பாங்கு, தொழில்சார் கல்வி, சமூக நலன்புரி ஆகிய பாடங்களை உள்ளடக்கிய நூல்களைக் கொண்டதாக விசேட தொகுப்பொன்று இங்கு காணப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டில் நூலக தன்னியக்க நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் நூல் ஆய்வு நடவடிக்கைகளுக்கு "கடியா" எனும் நூலக மென்பொருள் தாபிக்கப்பட்டு மேற்படி மென்பொருள் மூலம் புத்தகங்களின் இருப்பு கணிப்பீடு செய்யப்படுகின்றது.

தற்போது பல்வேறு பாடங்களுக்கும் உரித்தான சுமார் 22875 நூல்கள் இங்கு காணப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டில் புதிதாக 195 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. கல்விபயில்வோர் 160 பேர் நூலகத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதுடன், அவர்களுக்கு 14 நாட்கள் எனும் உச்சளவுக்கு உட்பட்டு 2 புத்தகங்கள் வீதம் கொண்டு செல்ல வழங்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆக்கங்கள், ஆராய்ச்சி அறிக்கைகள், மொழிபெயர்ப்பு ஆக்கங்கள், இலக்கியம், சூசிகை (Index), இலத்திரனியல் வெளியீடுகளும் இந்த நூலகத்தில் காணப்படுகின்றன. அகராதி, கலைச்சொல் அகராதி, கூட்டுறவுத்துறை சம்பந்தமான கட்டளைச் சட்டங்கள் (Ordinance), சட்டங்கள் (Act), சட்டமூலங்கள் (Bill), ஆணைக்குழு அறிக்கைகள், கூட்டத்தொடர் அறிக்கைகள் (Sessional Papers), ஆண்டறிக்கைகள் (Annual Report), அரிதான நூல்கள் (Rare Book) உட்பட ஆய்வுகளுக்கான மூலத்தொகுப்புக்களும் இங்கு காணப்படுகின்றன.

இந்த நூலகத்திலிருந்து நூல்களை வெளியே எடுத்துச் செல்லக்கொடுக்கும் பிரிவு மற்றும் நூல்களை படிப்பதற்கான ஆய்வு செய்யும் பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளும் காணப்படுவதுடன், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுகின்ற பனிபுள்ளி (Dew Point) வகைப்படுத்தலுக்கு அமைய இந்த நூலகம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை தொடர்பிலான அறிவைக் கொண்ட நூல்கள் தனியாக விசேட தொகுப்பொன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

நூலக அங்கத்துவம்

- தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் பாடநெறிகளை பயிலும் சகலரும்
- தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் கற்கைப் பதவியணி
- தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் கல்விசாரா பதவியணி
- தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்துடன் சம்பந்தப்பட்டுள்ள வருகைதரும் விரிவுரையாளர் குழு
- பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ள நாட்டின் பல்வேறு துறைகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஆட்களுக்கு ஆய்வுச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

வேறு சேவைகள்

ஒவ்வொரு பாடநெறியின் ஆரம்பத்திலும் நூலகத்தை பயன்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

3.3 விடுதிப் பிரிவின் முன்னேற்றம்

உதவிப் பணிப்பாளரினால் (விடுதி) விடுதிப் பிரிவு வழிநடாத்தப்படுகின்றது. நிறுவகத்தின் கற்கை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும், வெளி நிறுவனங்களினால் இந்த நிறுவகத்தில் நடாத்தப்படுகின்ற கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளுக்கான விடுதி மற்றும் உணவுச்சாலை சேவைகளும் உள்ளடங்களாக வசதிகளைச் செய்துகொடுப்பது இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நிறுவகத்திற்கு உரித்தான 1118 ஆசனங்களைக் கொண்டுள்ள மற்றும் நவீன வசதிகள் மிக்க மகிந்த ராஜபக்ஷ கேட்போர்கூடத்தின் நடவடிக்கைகளும் இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.3.1 2021 ஆம் ஆண்டில் விடுதிப் பிரிவு மற்றும் கேட்போர்கூடங்களை ஒதுக்கும் பணிகளின் முன்னேற்றம்

	வருமானம் ரூ..
விடுதி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்	3,264,690.00
விரிவுரை மண்டப வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்	1,075,075.00
உணவு வழங்குவதன் தரகுத் தொகை	608,667.48
சுற்றுலா விடுதி	254,000.00
கேட்போர் கூடம் (வரியுடன்)	480,000.00
கற்புல செவிப்புல வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்	207,715.90
வேறு	211,580.00
மொத்தம்	6,052,581.98

3.3.2 வெளி நிறுவனங்களுக்கு சேவைகளை ஆற்றுவதன் முன்னேற்றம்

நிறுவகத்தினால் அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களுக்கு செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளுக்கான வசதிகள் செய்துகொடுக்கப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டில் வெளி நிறுவனங்களினால் இந்த நிறுவனத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தகவல்கள் பின்வருமாறாகும். (கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் உட்பட)

		எண்ணிக்கை
i.	கருத்தரங்கு/செயலமர்வு	101
ii.	பங்கேற்பு	4790

3.4 நிதிப் பிரிவின் முன்னேற்றம்

நிறுவகத்தின் கணக்குகள் பிரிவானது உதவிப் பணிப்பாளர் (நிதி) இன் கண்காணிப்பின் கீழ் இயங்கிவருவதுடன், நிதிப் பிரிவின் பதவியணியினர் 07 பேராக இருக்க வேண்டுமாயினும் 2021 ஆம் ஆண்டில் ஐந்து பேரைக் கொண்டதாக இப்பதவியணி காணப்பட்டதுடன், 02 பதவி வெற்றிடங்களின் கீழ் பணிகளை நிறைவேற்றியது.
2021ஆம் ஆண்டில் நிறுவகத்திற்குக் கிடைத்த திறைசேரி ஏற்பாடுகள், நிறுவகத்தின் உழைப்புக்கள் மற்றும் தாபன செலவின நிதி நிலைமை பற்றிய பொழிப்புத் தகவல்கள் பின்வருமாறாகும்.

2021.12.31 ஆம் திகதிக்கு நிதிச் செயலாற்றுகை

<u>வருமானம்</u>	<u>ரூபா</u>
திறைசேரி ஏற்பாடு – மீண்டெழும்	45,729,500.00
கூட்டுறவு நிதிய ஏற்பாடு	150,000.00
நிறுவன உழைப்புக்கள்	20,223,200.00
ஒட்டுமொத்த வருமானம்	**66,102,700.00**
<u>செலவினம்</u>	
சம்பளமும், வேதனமும்	39,542,702.00
பிரயாணச் செலவினம்	136,459.00
எழுதுகருவி மற்றும் அலுவலகத் தேவைகளின் பெறுகை	3,839,580.00
பராமரிப்புச் செலவினம்	3,159,966.00

ஒப்பந்தச் சேவைகள் செலவினம்	16,541,409.00
ஏனைய செலவினங்கள்	1,153,276.00
ஒட்டுமொத்த செலவினம்	**64,373,392.00**
மிகை/குறை	**1,729,308.00**

சொத்துக்கள்	**ரூபா**
நடைமுறையல்லாத சொத்துக்கள்	
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	794,405,302.00
ஏனைய நிதிசார் மற்றும் நிதியல்லாச் சொத்துக்கள்	3,845,561.00
நடைமுறைச் சொத்துக்கள்	
வங்கியிலுள்ள காசு	32,758,571.00
குறுங்கால முதலீடு	28,824,371.00
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	39,326,638.00
மொத்த சொத்துக்கள்	**899,160,443.00**

உரிமையாண்மையும், பொறுப்புக்களும்	**ரூபா**
மூலதனம்	136,193,780.00
ஒதுக்கம்	658,450,906.00
நடைமுறையல்லாத பெறுப்புக்கள்	9,803,922.00
நடைமுறைப் பொறுப்புக்கள்	94,711,835.00
மொத்த உரிமையாண்மையும், பொறுப்புக்களும்	**899,160,443.00**

2021.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை
மூலதனக் கொடை பெறுகை மற்றும் மூலதன செலவினம் பற்றிய பொழிப்பு

திறைசேரிக் கொடை	மூலதனம்	2020	5,000,000
		2021	- 11,500,000.00
			16,500,000.00

மூலதனச் செலவினம் (திறைசேரி ஏற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள நிர்மாணிப்பு மற்றும் புதுப்பித்தல்கள் (ரூபா)

01 . N7/N8 உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பித்தல்	-ரூபா	2,774,862.00
02. வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் -	ரூபா	922,198.00
03. நிறுவக வளவை சுற்றி வேலி நிர்மாணித்தல் -	ரூபா	899,859.00
04. N1/N3 உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பித்தல்	ரூபா	994,457.00
		5,625,996.00

மூலதன பொருட்களின் கொள்வனவு மற்றும் ஏனைய செலவினங்கள் (ரூபா)

01. கணினி இயந்திரம் மற்றும் பாகங்கள் கொள்வனவு - ரூ. 6,152,700.00
02. ஸ்மார்ட் போட் 01 கொள்வனவு - ரூ. 375,000.00

திறைசேரியின் மூலதன ஏற்பாடுகள் மூலம் தாங்கிக் கொண்ட மொத்த செலவினம் ரூ.12,119,076.00

* இறுதி பட்டியல் செலுத்தப்படாத ஒப்பந்தத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறுவன நிதியங்களிலிருந்து மூலதன செலவினங்களை தாங்கிக் கொள்ளல் (ரூபா)

01. அலுவலக உபகரணம் மற்றும் தளபாடம் உபகரணம் - ரூ. 398,394.00
02. நூலக புத்தகங்கள் - ரூ. 100,199.00

நிறுவன நிதியங்களிலிருந்து தாங்கிக்கொள்ளப்பட்ட மூலதன செலவினம் ரூ. 534,443.80

3.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் முன்னேற்றம்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஆகியோரைக் கொண்டதாக இருப்பதுடன் முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடமானதன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வாளரினால் மாத்திரம் அந்நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

2021 உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய நிறுவகத்தின் தாபன மற்றும் நிருவாக, கற்கை, நிதி, விடுதி, அச்சு, பரீட்சைகள், நூலகம், கணினி போன்ற சகல பிரிவுகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், கணக்காய்வு வினாக்கள் மற்றும் பதிலளிப்பதன் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

தொடர் இல.	பிரிவு	வினாக்களின் எண்ணிக்கை	விடயங்களின் எண்ணிக்கை	பதில் அளித்தல்
1	தாபன மற்றும் நிருவாகப் பிரிவு	3	13	சகல உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது
2	கற்கைப் பிரிவு	4	15	
3	நிதிப் பிரிவு	1	6	
4	விடுதிப் பிரிவு	1	5	
	மொத்தம்	9	39	

4.

2021.12.31 ஆம் திகதிக்கு நிறுவகத்தின் இறுதிக் கணக்குகள்

2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் இருந்தவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2021.12.31 ஆம் திகதிக்கு	2020.12.31 ஆம் திகதிக்கு
சொத்துக்கள்		ரூபா	ரூபா
நடைமுறையல்லா சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	2	793,591,552	813,352,218
ஏனைய நடைமுறையல்லாத சொத்துக்கள்	3	2,154,375	2,076,250
		795,745,927	**815,428,468**
வேறு பெறுகைகள்	3.1	896,621	893,676
மின்மாற்றியின் மீதான பிற்போடப்பட்ட அறவீட்டுச் செலவினம்		3,052,835	3,156,730
குறைக்க : வருமானத்திற்கு எதிராக பிற்போடப்பட்ட அறவீட்டுச் செலவினத்தை பதிவழிப்புச் செய்தல்		(103,895)	(103,895)
பிற்போடப்பட்ட அறவீட்டுச் செலவின எஞ்சிய மீதி	3.2	2,948,940	3,052,835
நடைமுறைப் சொத்துக்கள்			
நடைமுறை முதலீடு	4	27,483,746	16,262,045
கடன் பட்டோரும், ஏனைய கிடைக்க வேண்டியவையும்	5	38,150,991	38,025,870
இருப்பு	6	1,175,647	1,889,458
வங்கியிலுள்ள காசு	7	32,758,571	37,458,774
		99,568,955	**93,,636,147**
மொத்த சொத்துக்கள்		**899,160,444**	**913,011,126**
உரிமையாண்மையும், பொறுப்புக்களும்			
மூலதனமும், ஒதுக்கங்களும்			
மூலதனம்	8	233,254,215	233,254,215
திரட்டிய இலாபம் / (நட்டம்)	9	(97,060,435)	(95,719,950)
		136,193,780	**137,534,265**
ஒதுக்கங்கள்			
திறைசேரியிடம் கிடைத்த மூலதனக் கொடைகள்	10	366,540,789	381,844,312
அமைச்சிடம் கிடைத்த மூலதனக் கொடைகள்	11	12,380,629	13,016,458
மீள்மதிப்பீடு செய்த ஒதுக்கம்		271,358,932	271,358,932
பிரகடனம் செய்யப்பட்ட நிதியம்		8,170,556	7,745,092
		658,450,906	**673,964,795**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
பணிக்கொடை ஒதுக்கம்		9,803,922	8,766,883
கூட்டுறவு நிதியிடமிருந்து பெற்ற கடன்		-	19,000,000
		9,803,922	**27,766,883**
நடைமுறை பொறுப்புக்கள்			
கடன் கொடுத்தோர் மற்றும் நின்ற செலவினம்	12	59,044,653	54,010,381
கூட்டுறவு நிதியிலிருந்து பெற்ற கடன்		19,000,000	-
தடுத்துவைக்கப்பட்ட தொகைகள்		16,667,182	19,734,804
		94,711,835	**73,745,184**
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		**899,160,444**	**913,011,126**

குறிப்பு : நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பது நிறுவக முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

வருடாந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதாகவும், சரியானதாகவும் உள்ளன என்று சான்றுப்படுத்துகின்றோம்.

கையெழுத்திட்டது	கையெழுத்திட்டது	கையெழுத்திட்டது
ஜே.ஆர்.டபிள்யு. திசாநாயக்க துவிசாளர்	ஐ.எம்.ஐ.இளங்ககோன் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்	கே.டி. அனில் உதவிப் பணிப்பாளர் (நிதி)

1.2. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

	குறிப்பு	உண்மை 2021	உண்மை 2020	2021 திருத்திய வரவு செலவுத்திட்ட மதிப்பீடு
வருமானம்		ரூபா	ரூபா	ரூபா
மீண்டெழும் செலவினங்களுக்கான அரச கொடை	13	45,879,500	30,420,055	49,440,000
மூலதனக் கொடையை தீர்த்தல்		27,442,152	27,553,432	-
தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தினால் உழைக்கப்பட்ட வருமானம்	14	20,331,685	18,063,793	20,397,414
		93,653,337	**76,037,280**	**69,837,414**
குறைக்க : செலவினம்				
01. ஊழியர் ஊதியம்	15	39,651,187	31,695,597	45,335,752
02. பிரயாணச் செலவினம்	16	136,459	113,725	500,000
03. பெறுகை	17	3,839,580	2,684,933	4,216,220
04. பராமரிப்புச் செலவினம்	18	3,159,966	1,611,279	3,159,000
05. ஒப்பந்த சேவைகள்	19	16,541,409	18,398,395	17,809,880
06. ஏனையன	20	1,153,276	722,994	1,234,600
07. தேய்மானம்	2	30,009,129	30,944,287	-
08. பிற்போடப்பட்ட செலவினங்களை பதிவழிப்புச் செய்தல்		103,895	103,895	-
		94,594,901	**86,275,104**	**72,255,452**
வரிக்கு முந்திய செயற்பாட்டு மிகை அல்லது (குறை)		**(941,564)**	**(10,237,824)**	**(2,418,038)**
குறைக்க : வரி		-	-	-
வரிக்கு பிந்திய தேறிய மிகை அல்லது (குறை)		**(941,564)**	**(10,237,824)**	**(2,418,038)**
வேறு விரிவான வருமானங்கள்				
ஆதனம், பொறி, உபகரணம் மீள்மதிப்பீட்டின் மீதான இலாபம் /(நட்டம்)		-		-
தேறிய மிகை /(குறை)		**(941,564)**	**(10,237,824)**	**(2,418,038)**

1.1. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	2021 ரூபா		2020 ரூபா	
காலப்பகுதிக்கான தேறிய மிகை /(குறை)		(941,564)		(10,237,824)
சீராக்கல்கள்				
கூட்டுக				
தேய்மானம்	30,009,129		30,944,287	
பிற்போடப்பட்ட செலவினத்தை தீர்த்தல்	103,895		103,895	
முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல் - கூட்டுக	182,327		1,481,009	
நிலையான சொத்து விற்பனை இலாபம்	-		-	
அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கம்	29,690		-	
தேய்மானம் - முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்	-		35,000	
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	1,037,039		1,494,534	
குறைக்க				
மூலதன ஏற்பாடுகளைத் தீர்த்தல்	(27,442,152)		(27,553,432)	
வட்டி வருமானம்	(643,056)		-	
பணிக்கொடை செலுத்தல்	-		(670,000)	
தடுத்துவைக்கப்பட்ட தொகைகள்	-		-	
நிலையான சொத்து விற்பனை இலாபம்	(221,055)		-	
முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல் - குறைக்க	(581,247)		(111,927)	
ஐயக் கடனுக்கான மிகை ஒதுக்கம்	-		(139,328)	
		2,474,570		5,584,037
செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் /(நட்டம்)		**1,533,006**		**(4,653,787)**
செயற்படு மூலதன மாற்றங்கள்				
கடன்பட்டோர் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் குறைவு / (அதிகரிப்பு)	(92,054)		2,199,028	
நின்ற செலவினங்கள் மற்றும் கடன் கொடுத்தோர் (குறைவு) / அதிகரிப்பு	5,034,272		(3,856,924)	
இருப்பு குறைவு / (அதிகரிப்பு)	713,811	5,656,029	(820,731)	(2,478,627)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்		**7,189,035**		**(7,132,414)**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்				

தடுத்துவைக்கப்பட்ட நிதி	(3,922,110)		(2,330,409)	
கொள்வனவு – ஆதனம், பொறி, உபகரணம்	(6,096,394)		(3,091,020)	
- காணி அபிவிருத்தி	(871,964)		-	
- கட்டிடம் மேம்படுத்தல்	(893,610)		(161,243)	
- தளபாடமும், பொருத்தலும்	(161,181)		-	
- வாகனம் கூட்டல்	(34,500)		-	
- நூலக புத்தகங்கள்	(110,200)		(119,806)	
- வேறு உபகரணங்கள்	(34,450)		-	
மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளின் மூலதனத் தன்மையிலான முதலீடுகள்	(1,188,875)		-	
நிலையான வைப்புக்களில் முதலீடு	(11,106,075)		5,674,153	
நிலையான சொத்து விற்பனை மூலம் பெற்ற நிதி	221,055		-	
கிடைக்க வேண்டிய ஊழியர் சேமலாப நிதியை மீள அறவிட்டுக் கொள்ளல்	(2,948)		-	
வட்டி வருமானம்	580,300	**(23,620,953)**	-	**(28,325)**
முதலீடுகள் மூலமான தேறிய காசோட்டம்				
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்				
திறைசேரி மூலம் பெற்ற மூலதனக் கொடை	11,500,000		5,000,000	
பதவியணி இடர் கடன்	(193,750)		415,278	
பிரடனம் செய்யப்பட்ட நிதி	425,464		419,485	
கூட்டுறவு நிதியத்தின் கடனை மீளச் செலுத்தல்	-		(3,119,454)	
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிள காசோட்டம்		**11,731,714**		**2,715,309**
ஆண்டினுள் தேறிய காசோட்டத்தில் அதிகரிப்பு		**(4,700,204)**		**(4,445,430)**
காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவைகளும்		**37,458,775**		**41,904,205**
காலப்பகுதியின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவைகளும்		**32,758,571**		**37,458,775**

1.2. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்

உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

விபரம்	மூலதனம்	இலாபம் /(நட்டம்)	மூலதன ஒதுக்கம் திறைசேரி	மீள் மதிப்பீட்டு மிகை	மூலதன ஒதுக்கம் அமைச்சு	நிதி	மொத்தம்
2020.01.01 ஆம் திகதிக்கு மீதி	233,254,215	**(86,851,208)**	**403,759,116**	**271,357,432**	**13,654,557**	**7,325,607**	**842,499,719**
குறைக்க : அரச ஏற்பாடுகளின் கீழ் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்களின் தேய்மானம்	-	-	(26,914,803)	-	(638,629)		(27,553,432)
காலப் பகுதிக்கான இலாபம்/(நட்டம்)	-	(10,237,824)	-	-	-	419,278	(9,818,546)
சீராக்கல் - கூட்டுக	-	1,481,009	-	1,500	530	206	1,483,245
சீராக்கல் - குறைக்க	-	(111,927)	-	-	-		(111,927)
காலப் பகுதியில் முதலீடு	-	-	5,000,000	-	-	-	5,000,000
2020.12.31 ஆம் திகதிக்கு மீதி	**233,254,215**	**(95,719,950)**	**381,844,313**	**271,358,932**	**13,016,458**	**7,745,091**	**811,499,059**
2021.01.01 ஆம் திகதிக்கு மீதி	233,254,215	(95,719,950)	381,844,313	271,358,932	13,016,458	7,745,091	811,499,059
குறைக்க : அரச ஏற்பாடுகளின் கீழ் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்களின் தேய்மானம்	-	-	(26,803,523)	-	(638,629)	-	(27,442,152)
காலப் பகுதிக்கான இலாபம்/(நட்டம்)	-	(941,564)	-	-	-	384,423	(557,141)
சீராக்கல் - கூட்டுக	-	182,327	-		2,800	41,041	226,167
சீராக்கல் - குறைக்க	-	(581,247)	-	-	-	-	(581,247)
காலப் பகுதியில் முதலீடு	-	-	11,500,000	-	-	-	11,500,000
2021.12.31 ஆம் திகதிக்கு மீதி	**233,254,215**	**(97,060,435)**	**366,540,790**	**271,358,932**	**12,380,629**	**8,170,555**	**794,644,686**

1.3 2021.12.31 ஆம் திகதிக்கு கணக்குகள் தொடர்பிலான குறிப்புக்கள்

குறிப்பு 01

கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1அ கணக்கீட்டு சம்பிரதாயங்கள்

